உ.

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 30 | விரோதிகிருது - சித்திரை – 10—5—71 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## சித்திரைச் சிறப்பு

உலகத்தின் நடைமுறை அனைத்திற்கும் காலம் முதலாய் நிற்கின்றது. அதற்கு அடுத்து நிற்பது இடம். 'இடம்' என்பதை நாம் நிலமாகவே கருதுகின்றோம். அதனால் இடத்தை, 'காட்சிப் பொருள்' என்றும் எண்ணுகின்றோம். ஆனால், காலத்தை நாம் காட்சிப் பொருளாக நினைப்பதில்லை. இதுபற்றியே, உலகப் பொருள்களை 'முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்' என மூன்றாகப் பிரித்து, 'அவற்றுள், காலமும், இடமும் முதற்பொருள்' என்று கூறிய தொல்காப்பியர்,

" முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே "

என, இடத்தை முன்வைத்துக் கூறினர். என்றாலும், எல்லாப் பொருட்கும் முதலாய் நிற்பது காலமே.

இத்தன்மைத்தாகிய காலத்தின் பகுப்பு, 'பொழுது' எனப்படுகின்றது. இதை இக்காலத்தில் நாம், வேளை, நேரம்' என்றெல்லாம் சொல்லுகின்றோம். காலப் பகுப்பாகிய 'பொழுது', 'பெரும்பொழுது, சிறுபொழுது' என இரண்டாகக் கூறப்படுகின்றது. மழை, பனி, கோடை முதலிய ஆண்டின் உட்பிரிவுகள் பெரும்பொழுது. காலை, நண்பகல், மாலை, யாமம் முதலிய நாளின் உட்பிரிவுகள் சிறுபொழுது.

மழைக் காலம் பெருமழைக் காலமும், சிறு தூவற்காலமும் என இரண்டாய் நிற்கும். பெருமழைக் காலமே 'கார் காலம்' எனப்படும். பனிக் காலமும் முன்பனிக் காலம், பின்பனிக் காலம் என இரண்டாகும். முன்பனிக் காலமே பனி மிகுந்து காணப்படுவது. கோடைக் காலம் 'வேனிற் காலம்' எனப்படும். இதுவும் 'இளவேனில், முதுவேனில்' என இரண்டாகும். இளவேனில், வேனிலின் இளமைப் பருவம்; அதனால் அப்பொழுது வெயில் மிக்கெறிக்கும். முதுவேனில் அதன் முதுமைப் பருவமாம். ஆகவே, அதுபொழுது வெயிலின் கடுமை குறைவதாகும். 'கார், தூவல், முன்பனி பின்பனி, இளவேனில், முதுவேனில்' என்னும் சிறுபொழுதுகள் ஆறும், ஆவணி முதலாக இரண்டிரண்டு திங்களை முறையே பெற்று வரும். இவைகளில் கார்ப் பருவத்திற்குரிய முதல் திங்களாகிய ஆவணித் திங்களுக்கு ஒரு காலத்தில் மிக்க சிறப்பு இருந்திருக்கின்றது. இக்காலத்திலும் விநாயக சதுர்த்தி, வேதாத்தியயனத் தொடக்கம் முதலியவை ஆவணித் திங்களில் வருதல் நினைக்கத்தக்கது.

ஆவணித் திங்கள், பகலவன் தனக்கே உரிய சிங்கராசியில் நிற்கும் காலம் என்பது பற்றித் தமிழ் ஆண்டு ஒரு காலத்தில் ஆவணித் திங்களிலேயே தொடங்கிற்று, அந்தச் சிறப்பை இப்பொழுது சித்திரைத் திங்கள் பெற்றுச் சிறக்கின்றது. இராசிகள் பன்னிரண்டில் முதலாவதாகிய மேடத்

தில் பகலவன் நிற்கும் காலம் என்ற காரணத்தால், இது பொழுது சித்திரைத் திங்கள் தமிழ் ஆண்டின் முதல் திங்களாக விளங்குகின்றது. இது சிவநெறிக்கும் பல வகையில் சிறப்புடைத்தாகின்றது.

சிவநெறியின் முதல் மந்திரம் ஐந்தெழுத்துக்களாலானது. அதில் ஏனைய நான்கெழுத்துக்களைவிட 'சி' என்னும் எழுத்தே மிக்க சிறப்பை உடையது. 'அதனை முதலில் வைத்துச் சொல்வதே சிறந்த முறை' என்றும் கூறப்படுகின்றது. தமிழ் முறையில் அந்த எழுத்தை முதலில் கொண்டு நிற்பது சித்திரைத் திங்கள் ஒன்றே. எனவே இது சிவநெறிக்குச் சிறந்ததாகின்றது.

'சிவநெறித் தலைவர்களாய நால்வருள் மூத்தோராகிய அப்பர் பெருமான் இறையடி கூடிய நன்னாள் சித்திரைச் சதயமே' என்பது சேக்கிழாராலே தெளிவுபெறக் கூறப்பட்டது.

மூவாண்டிலே சிவஞானம் பெற்றுப் பாண்டிய மன்னனைச் சைவனாக்கிப் பாண்டி நாடு முழுவதும் திருநீற்றொளி தழைக்கச் செய்த மற்றோர் அருட்பேராசிரியராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சீகாழியிலே திருவவதாரம் செய்தருளியதும், பின்பு அவர் மூன்றாம் ஆண்டுத் தொடக்கத்திலே தோணியப்பர் பெரிய பெருமாட்டியுடன் விடை ஏறிவந்து ஞானப்பால் கொடுக்கப் பெற்றதும் சித்திரைத் திருவாதிரை நாளே. இவற்றை நினைத்துச் சேக்கிழார் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்தைத் தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் அரசன் முதலிய பலரும் கேட்க ஒரு சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையில் அரங்கேற்றி முடித்தார்.

விறன்மிண்ட நாயனார் திருவடி யடைந்த திருநாளும் சித்திரைத் திருவாதிரையாதல் நினைக்கத் தக்கது. சிறுத்தொண்டர், இசை ஞானியார் என மற்றும் அடியார் இருவரும் சித்திரையிலே முத்தி பெற்றார்கள். "சித்திரை அத்தம் உமாபதி" என்றபடி, சந்தானசாரியர் நால்வருள் ஈற்றில்

நின்று எட்டுச் சித்தாந்த நூல்களையும், கோயிற் புராணம், சேக்கிழார் புராணம் முதலாக மற்றும் பல நூல்களையும் அருளிச்செய்த உமாபதி தேவநாயனுரும் சித்திரைத் திங்களிலே தில்லைக் கூத்தப் பெருமான் திருவடி நிழலை எய்தினர். இன்ன பல வகைகளில் சித்திரைத் திங்கள் சிவநெறிக்குச் சிறந்து நிற்பதால், தமிழ் ஆண்டுப் பிறப்பு சிவநெறி ஆண்டுப் பிறப்பாகவே திகழ்கின்றது என்று கூறலாம்.

சித்திரைக்கு உள்ள சிறப்புக்கள் பலவற்றில் திருஞான சம்பந்தர் சீகாழியில் அவதரித்துத் திருமுலைப்பால் உண்டருளிய சிறப்பே தலையாயது. தருமையாதீனத்திற்குச் சொந்தமான இத்தலத் திருக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரைத் திருவாதிரையில் நடைபெறும் திருமுலைப் பால் உற்சவம் இவ்வாண்டிலும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் உடனிருந்து திருவுளம்பாலிக்க, அற்புதவிளக்கச் சொற்பொழிவுகளுடன் பெருந்திரளான மக்கட் குழாத்திடையே நடைபெற்ற காட்சி, அன்பர்களது அகமும், புறமும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கச் செய்தமை, அகக் கண்ணில் என்றும் அகலா அருட்காட்சியாகும்.

அட்ட வீரட்டங்களுள் ஒன்ருய், இவ்வாதீனத்திற்குச் சொந்தமான மற்ருெரு திருக்கோயில் திருக்கடவூர்த் திருவீரட்டத்திலும் சிறப்புற நிகழும் சித்திரைப் பெருவிழாவில் கால சங்கார விழாச் சிறப்புடையதொன்று. இதுவும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் திருமுன்பில் இவ்வாறே இதுபொழுது நிகழ்ந்தமை குறிப்பிடத் தக்கது.

“ திருமுலைப் பால் தரிசித்தோர்க்கு மறுமுலைப்பால் இல்லை ” என்பது பழமொழி. எனவே, இத் திருவிழாத் தரிசனம் பிறப்பை நீக்குவதாகும். மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் காலனை உதைத்தருளிய அருட்செயலை விளக்கும் காலசங்காரத் திருவிழாத் தரிசனம், இறப்பைப் போக்குவதாகும். ஆகவே, பிறப் பிறப் பற்ற பெருநிலையை வழங்கி நின்ற இச் சித்திரையின் சிறப்பு, சிவநெறியாளர் சிந்தையில் எந்நாளும் சிறந்து விளங்குமன்ருே !

---

உ

குருபாதம்

குருவருள்

# தோத்திரமும் சாத்திரமும்

## நினைப்பும் மறப்பும்

உலகில் காணப்படும் பொருள்கள் 'அறிவுடையனவும் அறிவில்லனவும்' என இருவகையினவாய் இருத்தல் கண்கூடு. மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன என்னும் உயிர் வகைகள் அறிவுடையன என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அதற்குக்காரணம், அவை ஓர் இடம் விட்டு மற்றோர் இடத்திற்குத் தம் விருப்பம்போல் பெயர்ந்து செல்லும் இயக்கம் உடையனவாயும், தமது விருப்பு வெறுப்பு இன்பத் துன்பம் முதலிய உணர்ச்சிகளைத் தெளிவாகப் புலப்படுத்துவனவாயும் இருப்பதே.

புல், பூண்டு, செடி மரம் என்னும் தாவர வகைகள் இத் தன்மை யுடையனவாய் இல்லாவிடினும், அவையும் அறிவுடையனவே என்பதை நுணுகி ஆராய்ந்தால் அறியலாகும். தாவரங்கட்கு இடம்விட்டுப் பெயர்ந்து செல்லும் வெளி இயக்கம் இல்லாவிடினும், நீரை உறிஞ்சுதல், காற்றை உட் கொள்ளுதல் முதலிய உள் இயக்கம் இருக்கவே செய்கின்றது. இன்பத் துன்ப உணர்ச்சிகளையும் அவை புலப்படுத்தி நிற்றலை நுண்ணுணர்வுடையோர் அறிகின்றனர். அதனால், மற்றைய உயிரினங்கள் போலத் தாவரங்களும் அறிவுடையனவேயாம். சிறிதாய்ப் பிறந்து பெரிதாய் வளரும் தன்மையையே உயிரினங்கள் அனைத்திற் தம் பொதுவியல்பாக வைத்து, அவ் வியல்பு தாவரங்களிடத்திலும் காணப்படுதலால், 'அவைகளும் உயிரினங்களே, என்பதை எளிதில் உணர்ந்தனர் நம் முன்னோர்.

சிறு குன்றுகள், பெருமலைகள் என்பவைகளிடத்தும் வளர்ச்சியுள்ளதாக அன்றும், இன்றும் சிலர் கூறியபோதிலும் அவை அங்கொன்றும், இங்கொன்றுமாக ஓரோரிடத்தில்

சொல்லப்படுதலன்றி எவ்விடத்தும் உள்ள பொதுவியல்பாக இல்லாமையால், கற்கள் உயிரினமாதல் இல்லை. பொன் முதலிய உலோகப் பொருள்கட்குப் பிறப்பும் வளர்ச்சியும் இல்லாமையாலும், அவைகளிடத்துச் சில காரணம் பற்றி உண்டாகும் மாற்றங்கள் பிறபொருட் கூட்டத்துச் செயற்கையால் ஆவன அல்லது, தனித்து நிற்குமிடத்துத் தம்மியல்பால் ஆவன அல்ல ஆதலாலும் அவையும் (பொன் முதலிய உலோகப் பொருள்களும்) உயிரினத்துட் சேரா. பிறவும் இவ்வாறேயாம். ஆகவே, மக்கள் முதலிய உயிரினங்களே அறிவுடைப் பொருள்களாம். அறிவுடையனவாகிய உயிர்கள் 'அறிவுடையுலகம்' என்றும் அறிவில்லன வாகிய பிற பொருள்கள் 'அறிவி லுலகம்' என்றும் சொல்லப்படும்

அறிவுடைப் பொருளாகிய உயிர்களிடத்திலும் அறியாமை இருத்தல் நன்கறியப்படுகிறது; எனவே, உயிர்கள் அறிவோடு அறியாமையும் உடையன என்பது தெளிவு. அறிவே இல்லாமல் அறியாமை ஒன்றையே உடைய பொருள்களும் அறிவோடு அறியாமை உடைய பொருள்களும் இருத்தலால், அறியாமையே இல்லாது, அறிவு ஒன்றையே உடைய ஒரு பொருளும் இருத்தல் வேண்டும் என்பது நன்குணரப்படும். அந்தப் பொருளே இறைவன் அல்லது கடவுள். ஆகவே 'அறிவோடு அறியாமையும் உடையதாதல் உயிர்த் தன்மை' என்றும், 'அறியாமை இன்றி, அறிவு ஒன்றையே உடையதாதல் இறைத் தன்மை' என்றும் கொள்ளலாம்.

அறிவு, அறியாமைகளே, நினைப்பு மறப்புக்களாகவும் அமைகின்றன. அதனால் உயிர்கள் நினைப்பு ஒன்றையே உடையனவாய் இல்லாமல், மறப்பையும் உடையனவாகின்றன. இறைவனுக்கு மறப்பு என்பது இல்லை. மறப்பு என்னும் குற்றத்தால் உயிர்கள் மறக்கக் கூடாத பொருளையும் மறந்து விடுகின்றன. அதனால், அவைகள் அடையும் துன்பங்கள் பல.

மறப்பு அல்லது மறதி என்னும் குற்றத்தை விலக்குதற்கு திருவள்ளுவர் ஓர் அதிகாரமே அமைத்திருக்கின்றார். அவ்வதிகாரம், பொச்சாவாமை என்பது.

பொதுவாக, மக்கள் மறதியைப் பெருங்குற்றமாகக் கருதுவதில்லை. ஒருவர் 'ஒன்றைச் சொல்ல அல்லது செய்ய

மறந்துவிட்டேன்' என்று சொன்னால் அதை நாம் பெருங் குற்றமாக நினைப்பதில்லை. ஆயினும், திருவள்ளுவர் மறதியை பொறுக்கக் கூடாத பெருங்குற்றமாகக் கருதுகின்றார். ஒன்றை மறத்தற்குக் காரணம், அதில் பற்றில்லாமை யாகையால், சொல்லத்தக்க அல்லது செய்யத்தக்க ஒன்றைச் சொல்லவோ அல்லது செய்யவோ மறந்துவிடுவது அதிற் பற்றில்லாமையே என்பது பற்றியே அவர் மறதியை அவ்வாறு கருதுகின்றார். இன்னும், ஒன்றை மறப்பது வேறொன்றை அதைவிடச் சிறந்ததாக நினைப்பதாலேயாம். ஆகவே. சிறப்புடைய பொருளை மறப்பது பெருங்குற்ற மாகின்றது.

" தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் "

ஒருவன் தனக்குத் தானே அழிவை உண்டாக்கிக் கொள்வது, அளவுகடந்த கோபத்தினால்தான், என்பது முதலாகக் கோபத்தின் கொடுமையை எடுத்துக் காட்டுகின்ற திருவள்ளுவர், 'கோபத்தைவிட ஒருவனுக்கு அழிவை உண் டாக்குவது மறதிதான் என்கிறார்.

" சிறந்த வெகுளியின் தீதே; சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு "

(சிறந்த உவகை மகிழ்ச்சி, அற்பப் பொருளில் மகிழ்ந்து ஒகளிக்கின்ற மயக்கம் சோர்வு - மறதி )

" பொச்சாப்பு (மறதி) புகழைக் கொல்லும் "

" பொச்சாப்பு (மறதி) உடையவர்க்குப் புகழ் கிடையாது என்பது அறிவுடையோர் அனைவர்க்கும் ஒருபடித்தாக உடன்பாடு "

" மறதியால் பெருமை இழந்து கெட்டோர் பலர் "

" மறதி இல்லையாயின் நினைத்ததை நினைத்தவாறே பெறலாம் "

என்றாற்போல்வன அவர் மறதியைப் பற்றிக் கூறும் சில கருத்துக்கள்.

இந்த மறதியோடு உடன்பிறப்பாக மற்றும் ஒரு மூன்றை அவர் வேறோரிடத்தில் குறிக்கின்றார். அவை கால நீட்டிப்பு, சோம்பல், தூக்கம் என்பவை. இந் நான்கில் ஒன்றே

ஒருவனுடைய கேட்டிற்குப் போதும். இந் நான்குமே ஒருவனிடத்தில் இருந்துவிடுமாயின், அவனது நிலை என்னவாகும்!

' நெடுநீர், மறவி மடி, துயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் "

என்பது அக் குறள்.

இன்றியமையாது என்றும் நினைக்கத்தக்க பொருள் இறைவன். எனவே, அவனை மறப்பது குற்றத்தினும் குற்றமன்றோ! இந்நிலையையும் திருவள்ளுவர் தாம் எடுத்துக் கொண்ட நூலுக்கேற்ப அறத்தின்மேல் வைத்துக் கூறுகின்றார்.

அறத்தினூஉங் காக்கமும் இல்லை ; அதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு.

'மற்றையவற்றை மறப்பதிலும் அறத்தினை மறத்தல் பெருங் கேட்டைத் தருவதாகும்' என்பது அக் குறளின் பொருள். இதை அப்படியே இறைவனை மறத்தலில் வைத்து நாம் உணர்தல் வேண்டும்.

'மறதியை உண்டாக்குவது அறியாமையே'

என்பது முதலிலே குறிப்பிடப்பட்டது. அறியாமையையே 'ஆணவ மலம்' என்று சாத்திரங்கள் கூறும். ஆணவ மலத்தின் செய்தியே, தாழ்ந்ததில் விருப்பத்தை உண்டாக்கி உயர்ந்ததை மறக்கச் செய்வது. இதன் செயலுக்கு அஞ்சியே பெரியோர்கள் இறைவனிடம் பலவாறு முறையிடுகின்றனர்.

" நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன் "

என்று சுந்தரர், தாம் இறைவனை மறந்த காரணத்தால் அல்லல் உற்று அலமந்ததாகக் குறிப்பிடுகின்றார். அதன்பின் அவர் திருவருள் பெற்ற காரணத்தால்,

"மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை "

" எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமான் "

" அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே "

" ஆரூரானை மறக்கலும் ஆமே "

" நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா
நமச்சிவாயவே "

என்றெல்லாம் தமது மறவா நிலையைப் பல இடங்களில் குறித்தருளுகின்றார். நாவுக்கரசரும்,

'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்;
நினையா தொருபோதும் இருந்தறியேன்"

என்று குறிப்பிட்டு, பின்பு,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி
என்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டும்"

என்று மறவா வரம் வேண்டினர். காரைக்கால் அம்மையார், இறவாத இன்ப அன்பை வேண்டியபின்,

"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்"

என்று வேண்டுக்கொண்டமையைப் பலரும் அறிவர்.

மறவாமையே, 'அயராமை' எனப்படுகின்றது. அயராமையால் விளைவது அன்பு; அந்த அன்பினால் விளைவது இன்பம். எனவே, சிவனை மறவாச் சிந்தையர் அவன்பால் பெருகி எழுகின்ற அன்பே சிவமாய் அமர்ந்திருப்பவராவர். இதனையே மெய்கண்டார்,

"அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்று அருளிச்செய்தார்.

அயர்ப்பை - மறப்பை - உண்டாக்குவது அறியாமையைச் செய்கின்ற ஆணவ மலம். அதனை நீக்க வேண்டியே சிவானந்தப் பெருவாழ்வை விரும்பும் பெரியோர் பலரும் இறைவனை இவ்வாறு மறவாதிருக்க வேண்டினர்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்"

என்றார் சேக்கிழார். இத்தகைய வேண்டுதல்கள், திருமுறைகளில் வருதலை ஆங்காங்கு நிரம்பக் காணலாம். அவ்வேண்டுதல்களின் பொருள் சாத்திரத்தினாலேயே இனிது விளங்கப் பெறுதல் அறிந்து சிவனை மறவாச் சிந்தையராய்ப் பயன் அடைதல் மக்கள் கடனாகும்.

# திருவருட்பயன் விளக்க உரை

( மலர் 30, இதழ் 4, பக்கம் 192இன் தொடர்ச்சி )

எட்டாவது குறள்,

" இருளி லிருளாகி யெவ்விடத்தி லெல்லாம்
பொருள்க ளிலதோ புவி "

எனவரும்.

இதன் பொருள் :- புவி - இந்நிலவுலகம்; இருளில் இருள் ஆகி - இருள் உள்ள பொழுதில் இருளேயாகியும்; எல் இடத்தில் எல் ஆம் பொருள்கள் - ஒளி வந்தபொழுதில் ஒளியேயாகியும் சார்ந்ததன் வண்ணமாகின்ற பொருள்களை; இலதோ - உடைத்தாயிற்றில்லையோ !

விளக்க உரை :- ' இருள், ஒளி ' என்பன ஆகு பெயராய் அவை உள்ள காலத்தைக் குறித்தன. ' இருளில் இருளாயும், ஒளியில் ஒளியாயும் இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாகின்ற பொருள்கள் கண், படிகம், விண் முதலாகப் பல உள்ளன ' என்றபடி.

எனவே, இதனால், பொருள்கள் சத்தும், அசத்தும் ஆகிய இருதிறத்துள் யாதானும் ஒரு திறத்துள் நிற்பதன்றி, அவ் விருதிறனுமாகாமலும், இரு திறனுமாகியும் நிற்றல் கூடாது; அதனால், ' உயிர் சத்தோ, அசத்தோ ' என வினவுவார்க்கு, ' சத்துந்தான், அசத்துந்தான் ' என விடை கூறுதல் அனேகாந்த வாதமாம் (ஒரு முடிவு இல்லாத பேச்சாகும்). ஆகவே, ஆன்மாவை, ' சதசத்து ' என்றல் போலியாம் போலும் என்னும் தடைக்கு, ' உயர்ந்ததும், இழிந்ததுமன்றிச் சார்ந்ததன் வண்ணமாகின்ற பொதுமைப் பொருளும் உண்டு ' என்பதனை உவமையளவையால் உணர்த்தி விடை கூறி, மேலைக் குறளிற் கூறிய பொருள் வலியுறுத்தப்பட்டதாம்.

மக்களுள்ளும் பலர், பிறர் ஒன்றைப் புகழ்ந்தால் தாங்களும் ' நன்று ' என்று புகழ்பவராயும், பிறர் இகழ்ந்தால், தாங்களும் அதனை, ' தீது ' என்று இகழ்பவராயும் இருத்தலைக்

காணலாம். இவர்களை உமாபதி சிவாசாரியார், 'தமக்கென ஒன்றிலர்' ¶என்பார். இத்தன்மையோர் மேன்மக்களுமாகாமல், கீழ்மக்களுமாகாமல், பொதுமக்களாய் இருத்தல்போல, ஆன்மாவும் பெரும்பொருளாகிய பதியுமாகாமல், சிறுபொருளாகிய பாசமுமாகாமல், இடைப்பட்ட பொதுப்பொருளாம் என்பது உணர்க.

ஒன்பதாவது குறள்,

"ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
யாமன்கண் காணு தவை."

எனவரும்.

இதன்பொருள் : மன்கண் காணுதவை - அனுதியே பேரறிவோடு கூடியிருந்தும் அதனை அறியாது நிற்கும் சிற்றறிவுகள்; ஊமன் கண்போல - கதிரவன் ஒளியிற் கலந்து நின்றும் அதனை யறியாது நிற்கும் கூகையினது கண்போல; ஒளியும் இருளே மிக ஆம் - ஒளியிடத்தும் இருளில் மூழ்கி இருளாய், இருக்கும் தன்மையையே மிகப் பெற்றிருக்கும்.

விளக்க உரை : வருவித்துரைத்தன இசையெச்சங்கள். 'ஒளி இருள்' என்பன உவமையும் பொருளுமாகிய இரண்டற்கும் இயையப் பொதுவாய் நின்று, முறையே இயற்பெயராய் அவ்வப்பொருளையும், உவம ஆகுபெயராய், அறிவு அறியாமைகளையும் உணர்த்தி நின்றன. 'ஒளிக் கண்ணும்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. உம்மை 'இருளிடத்தன்றியும்' என இறந்தது தழுவிற்று. 'இருள்" என்றது, இருளாந் தன்மையை மன் - தலைமை. அது பெருமைமேல் நின்றது. 'காணுதவை' என்னும் வினையாலணையும் பெயர், அறிவை உணர்த்திற்று. ஊமன் கண்ணோடு உவமிக்கப்படுவதும், இருளேயாய் நிற்பதும் அதுவேயாகவின், எனவே, இதுபற்றியே அதனை வினைமுதல்போலக் கூறினர் என்க.

இதனுல், சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைய ஆன்மா, அனுதியே சத்தோடு கூடிநின்றும், சத்தில் அழுந்திச் சத்தாய் நில்லாது, அசத்தில் அழுந்தி அசத்தாய் நின்ற

¶அடிக்குறிப்பு : சிவப்பிரகாசம் அவையடக்கம்.

தென்னை என்னும் ஐயத்தினை, 'சார்ந்ததன் வண்ணமா கின்ற இயல்போடு, யாதொரு பொருளையும் படிமுறையான் உணர்தலன்றி, முதற்கண்ணே உணரமாட்டாத இயல்பும் உடைமையால், ஆன்மா முதற்கண் சிறுபொருளாகிய அசத்தில் அழுந்தி அசத்தாய் நின்றது' எனக்கூறி அகற்றி மேற்கூறிய சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடைமை வலியுறுத்தப்பட்டது.

இப் படிமுறை விளக்கமே 'பக்குவம்' எனப்படுவது என்க. எனவே, அனாதியில் பக்குவமின்றி நிற்கும் ஆன்ம அறிவிற்கே ஊமன்கண் உவமையாதல் அறிக.

பத்தாவது குறள்,

" அன்றளவு மாற்றுமுயி ரந்தோ வருடெரிவ
தென்றளவொன் றில்லா விடர் "

எனவரும்.

இதன் பொருள் : அன்று அளவும் அளவு ஒன்று இல்லா இடர் ஆற்றும் உயிர் - இருளில் அழுந்திய அன்று தொட்டே அது காரணமாக வந்து பொருந்துகின்ற எல்லையற்ற துன்பத்தைப் பொறுத்து நிற்கின்ற உயிர்; அந்தோ ஐயகோ; அருள் தெரிவது என்று - முதல்வனது ஞானமாகிய ஒளியைப்பெற்று இடர் நீங்கப்பெறுவது எந்நாளோ !

விளக்க உரை : 'அன்று" என்றது, மேற்கூறியவாறு இருளேயாய் நின்றநிலையை. அளவுதல் - கலத்தல். மேல், 'இருள்' என்றதனால், அருள் ஒளியாதல் பெறப்பட்டது.

'அருள் தெரிவது என்று' என்ற குறிப்பு, 'இருளில் அழுந்திய உயிர் படிமுறையான் விளக்கம்பெறும் தன்மைத் தாதலின், அதனினின்றும் நீங்குங்காலம் உண்டு' எனவும், 'ஆயினும் அஃது அவ்வவ்வுயிர்தோறும் உள்ள சிறப்பியல்பாகிய பக்குவ நிலைக்கு ஏற்பச் சேய்த்தாயும், அணித்தாயும் நிற்கும்' எனவும் கூறியவாறும். இதனுள்ளே, 'இருள் நிலை துன்பம்' என்பதும் 'அருள் நிலை இன்பம்' என்பதும் போந்தவாறு அறிக.

இதனால் மேல், ஊமன்கண்போல' என்ற உவமைபற்றி' 'உயிர்கள் எக்காலத்தும் ஒளிபெறுதல் இல்லைபோலும், என்று எழும் ஐயம் அகற்றப்பட்டது. (தொடரும்)

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A,

(மலர் 30. இதழ் 5. பக்கம் 255 இன் தொடர்ச்சி)

## 5. உயிர் நிலையாமை

187 தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்
அழைக்கின்ற போதறி யாரவர் தாமே.

குறிப்புரை :- செந்தளிர் - அழகிய கொழுந்து. இழைக்கின்ற - உண்டாக்கப்பட்ட. இறக்கின்ற கண்டும் - சருகாக மாறுதலைக் கண்டும். பிழைப்பு - தவறு. கொழுந்து சருகாக மாறுதலைக் கண்டும் வணங்கார் என்க. அழைக்கின்றபோது - இயமன் கூப்பிடுகின்ற காலம். அறியார் அவர் - அவர் அறிய மாட்டார்.

இறைவனடி ஏத்தாதவர் உயிர் பிரியும்நேரம் அறியமாட்டார் என்பதாம். 1

188 ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்துவருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே.

குறிப்புரை .- ஐவர் - ஐம்புலனறிவு. செய் - உடம்பு. விளைதல் - முதிர்தல். ஐவர் - பிரமனாதி ஐவர். பிரமனாதி ஐவரும் உடம்பினை ஓம்பி வருவார்கள் என்க. ஐவர்க்கு நாயகன் - சிவன். ஓலை - இறுதிச் சீட்டு. சிவனிடமிருந்து ஆணை வரவும் உடம்பினை ஓம்பாது கழிந்தனர் என்க.

உடம்புள்ளபோதே சிவனோடு ஆன்மா கலந்து இன்புற்றிருக்கவேண்டும் என்பதாம். 2

189 மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள
அத்துள்ளே வாழும் அரசரும் அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே.

குறிப்புரை :- மத்தளி - உடம்பு, தாளம் இரண்டு - உச்சுவாச நிச்சுவாசம். அரசர் - பஞ்சப்பிராணன். அரசன் - சீவன். மயங்குதல் - மாறுதல்.

எல்லாம் இருந்தும் மண்ணாய்ப் போயிற்று என்பதாம். 3

190 வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே.

குறிப்புரை :- வேங்கட நாதனை - வெந்துபோகும்உடம்புக்கு இறைவனை. விரகு - தன்மை. உடம்பு, அழியுந் தன்மையது என்று உணர்ந்து நந்தியை வணங்கவேண்டும் என்க. தாங்கவல்லாருயிர் - உடம்புக்குத் தாரகமாயுள்ள சீவன். அறியாமை யாவது, சீவன் அடையும் பயனை அறியாமை.

சிரசில் விளங்கும் வேங்கட நாதனை அறிந்து வணங்க வேண்டும் என்பதாம். 4

191 சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்
அன்றுணர் வால்அளக் கின்ற தறிகிலர்
நின்றுண ரார்இந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே.

குறிப்புரை :- வான்திசை பத்து - எட்டுத்திசையும் கீழ் மேலும் சேர்த்துப் பத்து. திவாகரன் - சிவசூரியன். சிவசூரியன் உணர்வினால் அளக்கின்றான் என்பதை அறிகிலர் என்க. உணரார் - உணர்ச்சியினால் கூடார். பொன்றுதல் - மடிதல். மடிவாரோடு சேர்க்கின்ற மாயத்தை அறியார் என்க.

உணர்வினல் சிவசூரியனைக் கூடாது அழிகின்றனர் என்பதாம். 5

192 மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவது
ஈறும் பிறப்புமொ ராண்டெனும் நீரே.

குறிப்புரை :- பட்டிகை - பட்டாடை. பீறுதல் - கிழிதல். பட்டிகை பீறுதல், அழிதல். கருமயிர் வெண்மயிராதல்; மாற்றம் பெறுதல். ஓராண்டு - சிறுபொழுது.

சிறு பொழுதில் வாழ்வும் மாற்றம் பெற்று அழியும் என்பதாம். 6

193 துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி
அடுத்தெரி யாமற் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே.

குறிப்புரை :- துடுப்பு - சுழுமுனை. பானையிலிருந்து எடுக்கும் அகப்பை போல் உள்ளது. பானை - உடம்பு. அரிசி - மதியமுதம். அடுப்பு - சேர்க்கை. மூன்று - சந்திரசூர்யாக்கினி மண்டலங்கள். அஞ்செரி கொள்ளி - பிராணன், அபானன், சமானன், உதானன், விதானன் ஆகிய பஞ்சப்பிராணன். விடுத்தன நாள் - வரையறுக்கப்பட்ட காலம்.

நாள் செல்வதற்குமுன் சிவயோகநெறி நின்று மதியமுதம் பருகவேண்டும் என்பதாம். 7

194 இன்புறு வண்டிங் கினமலர் மேற்போய்
உண்பது வாச மதுபோல் உயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலும் மூன்றெளி
கண்புற நின்ற கருத்துள்நில் லானே.

குறிப்புரை :- இனமலர் - கூட்டமான மலர். வாசமது - மணம் நிறைந்த தேன். வண்டு மலரினுள் சென்று மதுவினை நுகர்தல்போல் சீவன் அகத்தாமரையுள் பொருந்தி அமுதினை நுகரவேண்டும் என்க. மூன்றெளி - சோமசூரியாக்கினியாகிய

ஒளியில் விளங்கும் இறைவன். புற நின்ற கருத்து என்பது, புறத்தே செல்லும் மனம் என்றபடி.

சோதிப்பொருள் அகத்தேயுள்ளான் என்பதாம். 8

195 ஆம்விதி நாடி அறஞ்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டும் தென்சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே.

குறிப்புரை -- ஆம்விதி - ஆகின்றநெறி. சந்திரமண்டலத்தை அறிந்து போற்றலே ஆகின்ற நெறியாம் என்க. அறம் செய்தல் - நல்லொழுக்கத்தில் நிற்றல். அந்நிலம் - மேல்நிலம். போம்விதி - போகும் நெறி. அருமை வல்லார் - ஆகும் நெறி போகும் நெறி அறிந்தவர்.

ஆகின்ற வழியும் போகின்ற வழியும் அறிந்தோர்க்குச் சொல்லவேண்டியதில்லை என்பதாம்.


196 அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே.

குறிப்புரை .- அவ்வியம் - பொறாமை. பொறாமைக்குணம் அறத்தைக் கெடுக்கும் என்க. வெவ்வியனாகி - பேராசையுடைய வனாகி. வவ்வுதல் - கவர்தல். செவ்வியனாகி - செம்மையுடையவனாகி. தவ்விக்கொடு - அகப்பை சோறு கொடுத்து, தலைப்பட்ட போது - வாழும்பொழுது.

வாழும்பொழுது அறநெறியில் நிற்கவேண்டும் என்பதாம்.


( தொடரும் )

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான




திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்
திருமுலைப்பால் திருவிழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கு நிவேதனம் செய்யப் பால் வழங்குதல்
( 30—4—'71 )

தருமையாதீனம் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு
இந்து சமய அறநிலையத் துறையினர் அளிக்கும்
ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழா ;



அறநிலையத்துறை ஆணையர்
திரு. K. S. நரசிம்மன் B. A., B. L., I. A. S. அவர்களும்
தஞ்சைத் துணை ஆணையர்
திரு. V. S. கோதண்டபாணி B SC., B. L., அவர்களும்
நாகைத் துணை ஆணையர்
திரு. புலியூருடையான் அவர்களும்
சிதம்பரம் டாக்டர். திரு. K. அரங்கசாமிப் பிள்ளை M. B, B. S அவர்களும்
சீகாழி தேவஸ்தானக் கட்டளை விசாரணை
வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும்

ருமையாதீனம் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு
இந்து சமய அறநிலையத்துறையினர் அளிக்கும்
ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழா ;



சீகாழி தேவஸ்தானக் கட்டளை விசாரணை
த்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களிடம்
அறநிலையத்துறை ஆணையர்
திரு. K. S. நரசிம்மன் B. A., B. L., I. A. S. அவர்கள்
சுழற்கோப்பையையும் நிரந்தரக்கோப்பையையும் வழங்குதல்.

உ
சிவமயம்

திருவையாறு

# மகாகும்பாபிஷேகம்

**வி. சா. கு.**

(மலர் 30, இதழ் 5, பக்கம் 269 இன் தொடர்ச்சி)

## சிறப்புப் பதக்கங்கள் :

மகாகும்பாபிஷேகப் பணிகளில் மிகச் சிறப்பாக ஈடுபட்டுக் கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள், சிற்பங்கள் அமைத்தவர்களாகிய திரு. நாகராசன், திரு. சுந்தரமூர்த்தி ஆகியோருக்கும் யாகசாலைக் காவணத்தை அழகுற அமைத்த மாயூரம் மாணிக்கக் கொத்தனுருக்கும், அறுசுவை உணவை அனைவரும் விரும்பிச் சுவைக்கும்படித் தயாரித்தளித்த அட்டிற் பணியாளர் இராமநாத ஐயருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியோடு ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் பொற்பதக்கங்களை வழங்கியருளினுர்கள்.

## செய்திச்சுருள் :

இந்திய அரசினரின் செய்திச்சுருள் ஸ்தாபனத்தினர் (இந்திய டெலிவிஷன் படத் தயாரிப்பாளர்கள்) மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஒளிநிழற் படக்காட்சிகள் எடுத்தனர், நாடு முழுதும் இக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ இப்படம் வாய்ப்பாக உதவும்.

## மகாகும்பாபிஷேகம் :

31—3—71 புதன்கிழமை. திருவையாறு, மக்கள் வெள்ளத்தால் நிறைந்திருந்தது. சுமார் 4 லக்ஷத்திற்கு மேற்பட்ட ஜனத்திரள் அலை அலையாக வந்து கொண்டிருந்தது. காலை 7 மணி அளவில் திருவாவடுதுறை, குன்றக்குடி, மதுரை, காஞ்சிபுரம் மகாசந்நிதானங்களும், பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் தலைவர் தவத்திரு இராமசாமி அடிகள் அவர்களும்,

கட்டளை மடத்திற்கு எழுந்தருளினார்கள். புதுவை மாநில ஆளுனர் மேதகு. ஜட்டி அவர்களும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கனம் சதாசிவம், கனம் கிருஷ்ணசாமி ரெட்டியார். மதுரை சிவஸ்ரீ சுந்தரேச பட்டர். சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர் திரு. K. S. நரசிம்மன் அவர்களும். கோவை, தஞ்சை துணை ஆணையர்களும், திருமதி, சௌந்தரா கைலாசம் அவர்களும், தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் திரு. அந்தோனி அவர்களும், சிதம்பரம் டாக்டர், திரு. கே. அரங்கசாமி பிள்ளை அவர்களும், தஞ்சை, இராமநாதபுரம் மன்னர்களும், திருச்சி கலெக்டர் திரு. சுந்தரராசன் அவர்களும், சிருங்கேரி சங்கராசாரிய சுவாமிகள் மடத்தின் பிரதிநிதிகளும் மற்றும் பல பெருமக்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து கும்பாபிஷேக விழாவைத் தரிசிக்க ஆயத்தமானார்கள். சிதம்பரம் பொது தீக்ஷிதர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு மாலைசூட்டி மரியாதைகள்செய்து நடராஜப் பெருமான் பிரசாதம் வழங்கினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேக சிறப்பு விருந்தினர்களுக்கு வெள்ளியினால் செய்த விசேஷ நினைவுப் பதக்கங்களை அணிவித்தார்கள்.

காலை 8 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் பெருமக்கள் புடைசூழ திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள்.

யாகசாலையில் முறைப்படி பூர்ணாகுதி தீபாராதனைகள் நடைபெற்றன. காலை 8-45 மணி அளவில் கடங்கள் புறப்பட்டன, சிவாசாரியர்கள் கண்ணும் கருத்துமாக வைதிக நெறி முறைப்படிக் கிரியைகள் செய்து கடங்களை முடிமேல் தாங்கிப் புறப்பட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மிகவும் பாதுகாப்பாக அருகிலிருந்து உரிய ஆணைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். மங்கலவாத்தியங்கள் வேதசிவாகமத் திருமுறைப்பாராயணங்களுடன் விமானங்கள், இராஜகோபுரங்கள், சுவாமி, அம்பாள் சந்நிதிகளுக்கு கடங்கள் எழுந்தருளச்செய்யப்பெற்றன. ஒவ்வோர் விமானத்திற்கும் தனித்தனியே ஆதீன சிப்பந்திகள் நியமிக்கப்பெற்றிருந்தனர். அவரவரும் தம்தம் கடமைகளை வழுவாது செய்துகொண்டிருந்தனர். அகில இந்திய திருச்சி வானொலி நிலையத்தினர் நேர்முக வருணனைகள் செய்துகொண்டிருந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மேல் தளத்திற்கு எழுந்தருளினார்கள். கடங்கள் உரிய இடங்

களுக்கு எழுந்தருளச்செய்யப்பெற்றன. எல்லோரும் குடமுழுக்கு நிகழும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இளவெயில் காய்ந்துகொண்டிருந்தது. இடையிடையே மேகங்கள் தவழ்ந்து தவழ்ந்து அன்பர்களுக்கு நிழல் தந்துகொண்டிருந்தன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மகாகும்பாபிஷேகம் செய்விக்குமாறு சிவாசாரியர்களுக்குத் திருக்குறிப்பு வழங்கினர்கள். அன்பர்களின் அரகர முழக்கம் வானளாவியது. கெட்டிமேளங்கள் முழங்கின. திருமுறைப் பண்ணிசைவாணர்கள் மகுடமோதினர். அன்பர்கள் கரங்கள் தலைக்குமேல் எழுந்து குவிந்தன. 'ஐயாறப்பா' என்ற குரல் எங்கும் கேட்டது. பல்லாயிரவர் மனமும் பரவசம் உறும் வகையில் பஞ்சநதீசுவரசுவாமி அறம்வளர்த்தஅன்னை விமான கலசங்களுக்கும், இராஜகோபுரங்களுக்கும் ஏககாலத்தில் மகா கும்பாபிஷேகங்கள் நடந்தன.

உலகமக்கள் அனைவர்உள்ளங்களும் ஒருமுகமாகஐயாறப்பன் திருவடிகளையே வந்தித்து வாழ்த்தின. வானொலி வழியாக நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களும் குடமுழுக்கு நிகழும் நேரத்தில் ஐயாறன் திருவடிகளை அன்போடு ஏத்தினர். உலகம் அனைத்தும் நலமொடு வாழ அவன் அருள் வெள்ளம் வையகமெல்லாம் பொங்கிப் பொலிய அனைவரும் வாழ்த்தினர்.

தீபாராதனைகள் நடந்தன. அனைவரும் தரிசித்தனர். தீபாராதனைக்குப்பின் தீர்த்தங்கள், பிரசாதங்கள் அன்பர்கட்கு வழங்கப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மகாகும்பாபிஷேகத்திற்கு வருகைதந்து சிறப்பித்த திருவாவடுதுறை ஆதீனம், குன்றக்குடி, மதுரை காஞ்சி ஆதீனங்களின் மகாசந்நிதானங்களுக்குப் பொன்னுடைகள் மலர் மாலைகள் அணிவித்துச் சிறப்பித்தார்கள். புதுவை ஆளுநர் மேதகு, ஜட்டி, உயர்நீதிமன்ற நீதிபதிகள் கனம். சதாசிவம், கனம். கிருஷ்ணசாமி ரெட்டியார், அறநிலைய ஆணையர், மன்னர்கள் முதலியோர்க்குப் பொன்னுடைகள் போர்த்தி அருளாசி வழங்கினர்கள்.

மகாகும்பாபிஷேக விழாவைச் சிறப்புற நடத்திய தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுக்கு, திருவாவடுதுறை ஆதீனம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் பொன்னுடைகள் போர்த்திச் சிறப்பித்தார்கள். சிருங்கேரி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் திருமடத்தின் சார்பிலும் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

9-30 மணிக்கு ஐயாறப்பர் மூலஸ்தானத்திற்கு குடமுழுக்கு நடைபெற்றது. 10 மணி அளவில் அறம்வளர்த்தநாயகி மூலஸ் தானத்திற்கும் குடமுழுக்கு நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எல்லாவற்றையும் உடனிருந்து செய்வித்தார்கள்.

10 மணியளவில் வானொலியில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தமிழக மக்களுக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கினார்கள். மதுரை, குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் வாழ்த்துரை கூறினார்கள். மேதகு. ஜட்டி அவர்களும், கனம். சதாசிவம், கனம். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், ஆணையர் திரு. நரசிம்மன் அவர்களும், திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்களும் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தியருளிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் குருமணி அவர்களை வணங்கி வந்திருந்து சிறப்பித்த பெருமக்கள் அன்பர்கள், திருப்பணிகளில் பங்குகொண்ட அன்பர் கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

**மகாபிஷேகம் :**

மாலை 3 மணி அளவில் சுவாமி அம்பாள் முதலிய மூர்த்தி களுக்கு மகாபிஷேகம் நடைபெற்றது. அபிஷேகப் பொருள்கள் அனைத்தும் குறைவின்றி நிரம்பச் சேகரித்து அபிஷேகங்கள் செய்விக்கப்பெற்றன.

**திருக்கல்யாணம் :**

மாலை 6 மணி யளவில் ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமிக்கும் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பிகைக்கும் திருக்கல்யாண வைபவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இறைவன் போகியாயிருந்து உயிர்கட்குப் போகங்கள் அளிக்கும் அருட் கருணையை இது நினைவூட்டிற்று.

**பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா :**

இரவு 11 மணி அளவில் வெள்ளி ரிஷப வாகனத்தில் பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா நடைபெற்றது. வீதியுலாவின்போது,

வேதசிவாகம பாராயணமும், தக்க பக்கவாத்தியங்களுடன், எழுபது ஓதுவாமூர்த்திகளின் தேவார இன்னிசைப் பாராயணம் முதலியனவும் நடைபெற்றன. A. K. C. நடராஜன், மதுரை M. P. சேதுராமன் சகோதரர்கள், செம்பொன்னார்கோயில் இராஜரத்தினம் குழுவினர் முதலியோரின் நாதசுர இசை நடைபெற்றது.

அன்பர்கள் பலரும் வீதியுலாவில் உடன் வந்து பங்கு கொண்டு அருள்நலம் பெற்று சுவாமியை மீண்டும் திருக்கோயிலுக்கு எழுந்தருளுவித்து மகிழ்ந்து எல்லோரும் தத்தம் இல்லம் திரும்பினர்.

## மண்டலாபிஷேகம் :

மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 1—4—71 வியாழக்கிழமை முதல் மண்டலாபிஷேகம் தொடங்கி நடைபெற்றது.

சித்திரைத்திங்கட் பெருவிழாவை முன்னிட்டு, மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா, நிகழும் விரோதிகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 15ஆம் நாள் (28—4—71) புதன்கிழமை காலை 10-மணி அளவில் 1008 சங்காபிஷேகம் செய்வதன் மூலம் சிறப்பாக நடைபெற்றது.

மாலை ஸ்ரீ பஞ்சநதீசுவரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாளுக்கு நவசக்தியர்ச்சனையும், இரவு பஞ்சமூர்த்திகளின் திருவீதியுலாக்காட்சியும், நாதசுர இன்னிசை, தேவார இன்னிசைப் பாராயணங்களும் நடைபெற்றன. அன்பர்கள் விழாவில் பங்குகொண்டு ஸ்ரீ ஐயாறப்பர் அருள்பெற்று உய்ந்தனர். அன்று மாலை 5-மணிக்கு திரு. இராம கோவிந்த சாமிப் பிள்ளை, திரு. சுவர்ணகாளீச்சுரர் ஆகியோரால் கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் என்ற தலைப்புக்களில் விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. அன்று காலை மாலை இருவேளைகளிலும் தஞ்சை, அறநிலையத்துறைத் துணை ஆணையர், திரு. V. S. கோதண்டபாணி அவர்கள் கலந்துகொண்டு வழிபட்டார்கள். மற்றும் பல அன்பர்களும் வழிபட்டு இறையருள் பெற்றனர்.

திருவையாறு கட்டளைவிசாரணை ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மண்டலாபிஷேக விழாவை உடனிருந்து சிறப்பாக நிகழ்த்திவைத்தார்கள்.

## திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானம்
## மகாகும்பாபிஷேக விழாவில் நிகழ்ந்த

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

### நிகழ்ச்சிச் சுருக்கம் :-

"வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நெறி காட்டும்" விகிர்தனுகிய ஐயாறப்பன் - அறம்வளர்த்த நாயகியாரொடு குடமுழுக்குக் கொண்டருளிய பெருவிழாவையொட்டி 28—3—71 அன்று தொடங்கி நான்கு நாட்களுக்குத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

ஐயாறப்பர் திருக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின் தென் பகுதியில், தென் திருக்கயிலாயத்தை ஒட்டி அமைக்கப்பெற்றிருந்த மாபெரும் மாநாட்டுப் பந்தல் வண்ணந் தீட்டப்பெற்ற ஓலை முகப்பொடு அற்புதமாகக் காட்சியளித்தது. பன்னிற வண்ண விளக்குகளாலும் தோரணங்களாலும் ஒளிகொட்டும் குழல்விளக்குகளாலும்ஒளியூட்டி அலங்கரிக்கப்பெற்ற மாநாட்டுப் பந்தல் பத்தாயிரம் பேர் அமர்ந்தினிது கேட்கத்தக்க அளவில் பிரமாண்டமாக அமைக்கப் பெற்றிருந்தது. சந்தானசாரியார் திருமரபிற்கு முதல்வராக விளங்கும் நந்தியெம் பெருமான் திருவவதாரஞ் செய்த திருத்தலம் ஐயாறு என்பதனைப் போற்றிக் கொள்ளும் வகையில் 'மாநாட்டுப் பந்தலுக்குத் திருநந்திதேவர் திருக்காவணம்' எனப்பெயர் சூட்டப்பெற்றிருந்தது. மாபெருந் திருக்கோயிலின் எவ்விடத்திலிருந்தும் நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழும்வண்ணம் ஒலிபெருக்கிகள் அமைக்கப்பெற்றுத் திகழ்ந்தன.

சைவத்தின் இருகண்களெனப் போற்றத்தகும் சாத்திர - தோத்திரங்களை அருளிச்செய்த பெருமக்கள் நினைவினைச் சிறப்பிக்கும் வண்ணம் நான்கு நாட்களும் விழா நிகழ்ச்சிகள் அமைக்கப்பெற்றன.

ஐயாற்றிலும், அதன் சுற்றுப்புறங்களிலும், மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பதினுயிரக்கணக்கான ஆண்களும் - பெண்களுமாகிய பெருமக்கள் அமைதியோடு வீற்றிருந்து நான்குநாள் நிகழ்ச்சிகளையும் செவிமடுத்துப்

புண்ணியப் பேறு பெற்று ஐயாறப்பன் பேரருள் மாந்திச் சிறந்தனர்.

28—3—'71 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் நாதஸ்வர மங்கல இசை பெருக முதல்நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கலாயின.

திருமுறை இன்னிசை வாணர்கள் திரு. எம். சுப்பிரமணி முதலியார், திருக்களர், திரு, டி. சுந்தரேச தேசிகர் இருவரும் திருமுறை இன்னிசை வழங்கினர்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தான கட்டளை விசாரணை, தவத்திரு. வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் குடமுழுக்கு விழாவின் தத்துவங்களை விளக்கி, ஐயாற்றின் பெருமைமிகு புராண வரலாறுகளை எடுத்துரைத்து சாத்திர தோத்திரத்தின் பெருமைகளை விதந்தெடுத்து, மாநாட்டு நிகழ்ச்சிகளின் அமைப்பு முறையினை விளக்கி; விழாவில் பங்குபற்றிய பெருமக்களையும், பேரன்பர்களையும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சார்பாகவும், திருக்கோயில் விழாக்குழுவின் சார்பாகவும் வரவேற்றுச் சிறப்பித்தார்கள்.

சிதம்பரம், அறப்பணிச் செல்வர். டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தஞ்சாவூர் மன்னர் மரபினரான மேதகு. இராஜாராம் ராஜா சாகேப் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தி விழாவினைத் தொடங்கி வைத்தார்கள்,

முதல் நாள் விழா சைவ சமயத்தின் முதற் குரவராகிய ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானையும், சாத்திரத் தலைவராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாரையும் சிறப்பிக்கும் வண்ணம் திருஞானசம்பந்தர் - மெய்கண்டார் திருநாள் என அமைக்கப் பெற்றிருந்தது

தஞ்சை, பள்ளி அக்ரகாரம் பழந்தமிழ்ப் புலவர் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையேற்றுச் சாத்திர தோத்திரங்களின் சிறப்பினை விளக்கித் தலைமையுரை நிகழ்த்தினார்கள்,

தஞ்சை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. வி. சௌ. கோதண்டபாணி பி. ஏ., பி. எல்.,

அவர்கள் சிறப்புரையாற்றுகையில் தருமையாதீனத்தின் திருக்கோயிற் பணிகளையும், நிர்வாகத்தையும் பெரிதெடுத்துப் பாராட்டினார்கள்.

அடுத்து சாத்திர தோத்திர விரிவுரைகள் தொடங்கப் பெற்றன.

மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர், செந்தமிழ் வித்தகர், பேராசிரியர். திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ., அவர்கள் 'ஞானசம்பந்தர் கூறும் நல்லறம்' என்ற பொருள் பற்றிப் பேசுகையில் இல்லறமே நல்லறமாகப் பிள்ளையாரால் சிறப்பித்தெடுத்துப் பேசப்படுகிறதென்பதனை பலமுனை நின்று அக்சான்றுகளுடன் விளக்கினார்கள்.

சாத்திர விரிவுரையாக அடுத்து சித்தாந்தக்கலைச்செல்வர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான், திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி., அவர்கள் 'சிவஞானபோதம்' பற்றி விரிவுரையாற்றுகையில், 'முப்பொருளுண்மை' ஆசிரியர் மெய்கண்டாரால் சுருக்கமும் அழகும்பெற எங்ஙனம் விளக்கப் பெற்றுள்ளது என்ற அருமைப்பாட்டை அழகுற விளக்கினார்கள்

கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி கூறியபின் வாழ்த்தொடு இரவு 11 மணியளவில் முதல்நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் முற்றுப்பெற்றன.

திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாட்டின் பகுதியாக இரண்டாம் நாள் 29—3—71 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் சிவபூசகர் மாநாடு தொடங்கப்பெற்றது.

காலை 7 மணி முதலாகத் தென்கயிலாயத் திருக்கோயிலில் தமிழ் நாட்டின் பல்வேறிடங்களிலிருந்தும் வந்திருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட சிவபூசகர்கள் முறையாகச் சிவபூசை நிகழ்த்தி விட்டுச் சிவச்சின்னங்களொடு மாநாட்டு நிகழ்ச்சியில் பங்கு பற்றினர்.

மாயூரம் குமரக்கட்டளை திரு. என். சுவாமிநாதனும், சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையம் திரு. ஞானப்பிரகாசமும் திருமுறை இன்னிசை வழங்க மாநாடு தொடக்கப் பெற்றது.

கட்டளை சுவாமிகள் அவர்கள் சிவபூசகர்களையும், விரிவுரையாளர்களையும் வரவேற்றுச் சிவபூசையால் பயன் பெற்றோர் வரலாறுகளை எடுத்துரைத்து, சிவபூசைத் தத்துவம்பற்றிக் குறிப்பிட்டு, அதன் முறைகளைப்பற்றியும் சில குறித்து, காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களைத் தலைமையேற்கக் கேட்டுக்கொண்டார்கள்.

அவ்வண்ணம் தலைமையேற்ற தொண்டைமண்டல ஆதீன கர்த்தர் அவர்கள் சிவபூசை மகத்துவம் விதி முறைகள் பற்றித் தோத்திரங்களுள் கூறப்பெற்ற கருத்துக்களைச் சான்றோடு எடுத்துக்காட்டி விளக்கித் தம் தலைமையுரையை நிகழ்த்தினர்கள்.

அடுத்துத் தஞ்சாவூர் திருமதி. திலகவதி அம்மையார் அவர்கள் 'ஆளுடையபிள்ளையார் அற்புதங்கள்' என்ற பொருள் பற்றி விளக்கவுரையாற்றினர்கள்.

தருமையாதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர், சிவஸ்ரீ சாமிநாத சிவாசாரியார் அவர்கள் 'சிவபூசை விளக்கம்' என்ற பொருளில் வேத சிவாகம அடிப்படையில் சிவபூசை பற்றிய விளக்கங்களை எடுத்துரைத்தார்கள்.

கட்டளை சுவாமிகள் நன்றியுரையுடன் காலை நிகழ்ச்சிகள் யாவும் பகல் ஒரு மணியளவில் முடிவுற்றன.

அப்பர் அருணந்திதேவர் திருநாள் 29—3—71 திங்கள் மாலை 6 மணிக்குத் தொடங்கப்பெற்றது. நாதஸ்வர மங்கல இசைக்குப் பின்னர் திருவாவடுதுறை திரு. சோமசுந்தரம் திருச்செந்தூர் திரு. நமசிவாயம் இருவரும் திருமுறை இன்னிசை வழங்கினர்.

கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்று அப்பர்பெருமானின் அளப்பரும் பெருமைகளையும், அருணந்தி சிவத்தின் ஆற்றல்களையும் தோத்திரத்திலும், சாத்திரத்திலும் நின்று எடுத்துரைத்தார்கள்.

காலை நிகழ்ச்சியின் தொடர்ச்சியாகத் தருமையாதீனப் புலவர், தேவகோட்டை பாலகவி, வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் 'பிராசாதயோகம்' என்ற பொருள்பற்றிய சிவபூசை விளக்கம்செய்து உரைநிகழ்த்தினர்கள்.

காஞ்சிபுரம் வித்துவான், திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் 'பஞ்சபூதத்தலங்கள்' பற்றி விரிவுரையாற்றினர்கள். திருவையாறு, தருமையாதீனப் புலவர். வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் 'சப்தஸ்தானத் தலங்கள்' என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள்,

சென்னை, 'திருக்கோயில்' ஆசிரியர், சித்தாந்தப் புலவர்மணி, திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., அவர்கள் 'சிவஞானசித்தியார் - இருபா இருபஃது' என்பது பற்றிச் சாத்திர நுணுக்கம்பொதுள சிற்றுரை நிகழ்த்திச்சிறப்பித்தார்கள்.

பின்னர், சென்னை திருமதி. ஜெயகுமரி பாஸ்கரன் அவர்கள் நாவுக்கரசர்பெருமான் வாழ்வில் நிகழ்ந்த வியத்தகு செயல்களை தேவார அகச்சான்றுகளுடன் 'ஆளுடைய அரசின் அற்புதங்கள்' என்ற தலைப்பின் கீழ்நின்று விளக்கவுரையாற்றி மகிழ்வித்தார்கள்.

அடுத்து மாயூரம், அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் செஞ்சொற்கொண்டல் வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., டிப் (மொழியியல்) அவர்கள் 'அப்பர்கூறும் அறவுரை என்ற பொருள்பற்றிய விரிவுரை நிகழ்த்தினர்கள்.

கடல்கடந்த நாடுகளில் சென்று சைவத்தின் பெருமைகளை எடுத்துரைத்து அண்மையில் தாயகம் மீண்ட திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் கடல்கடந்த நாடுகளில் நமது சைவ சமயத்தின் சிறப்பும் பெருமையும் எங்ஙனம் உணரப்பட்டிருக்கிறது என்ற செய்திகளை விளக்கி 'அப்பரும், அருணந்தி தேவரும்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

அடுத்து அமுதமொழிக்கொண்டல் திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள் 'மீனட்சியம்மை திருமணம்' என்ற பொருள் பற்றி இனிய இன்னிசை விரிவுரை நிகழ்த்தி மகிழ்வித்தார்கள்.

இறுதியாகத் தருமையாதீன வித்துவான், பிர்மஸ்ரீ எம்பார், விஜயராகவாச்சாரியார் அவர்கள் 'சுந்தரர்' என்ற பொருள் பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்தினர்கள். இரவு ஒருமணியளவில் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவெய்தின.

30—3—71 செவ்வாய்க்கிழமை காலை நிகழ்ச்சியாக இரண்டாம் நாளும் சிவபூசகர் மாநாடு நிகழ்வுற்றது. காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார், சைதை திரு. நடராசன் குழுவினர் திருமுறை இன்னிசை நிகழ்ச்சிக்குப்பின் காலை 11 மணியளவில் மாநாடு தொடங்கியது,

திருவையாறு அரசர்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. சொர்ணகாளிஸ்வரன் அவர்கள் அனைவரையும் நயம்பட வரவேற்றார்கள்.

திருச்சி, திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜ பிள்ளை பி. ஏ., அவர்கள் தலைமையேற்றுத் திருமந்திரப்பாடல்கள் பலவற்றின் துணையொடு சிவபூசையின் பெருமையினையும் இன்றியமையாமையையும் எடுத்துரைத்தார்கள்.

சென்னை, கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் சப்தவிடங்கத் தலங்கள் என்ற பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துகையில், ஸ்ரீ தியாகராசப்பெருமானின் அருளிப்பாட்டையும், திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் சிறப்பினையும் விதந்தெடுத்து விளக்கினார்கள்.

அடுத்து, திருவாடானை, சிவஸ்ரீ ஐயாமணி சிவம் அவர்கள் 'கும்பாபிஷேகத் தத்துவம்' பற்றி வேத - சிவாகம நெறிநின்று விரிவுரை நிகழ்த்தினார்கள்,

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறப்பெற்றுக் காலை நிகழ்ச்சிகள் பகல் ஒருமணியளவில் இனிதே நிறைவெய்தின.

30—3—'71 செவ்வாய்க்கிழமை மாலை சரியாக 6 மணிக்கு சுந்தரர் - மறைஞானசம்பந்தர் திருநாள் மங்கல இசை முழங்க தொடங்கப் பெற்றது.

திருச்சி, திரு. முத்துக்கந்தசாமி, பள்ளத்தூர், திரு. இரத்தினசபாபதி குழுவினர் திருமுறை இன்னிசை நிகழ்த்தினர்,

கட்டளை சுவாமிகள். தவத்திரு. வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் உரிய வகையில் வரவேற்றார்கள்.

மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்குகையில் சிவலிங்கத் தத்துவம்

பற்றிய சமய உண்மைகளை எளிய நடையில் விரித்துரைத்தார்கள்.

தலைமை யேற்ற சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி. மாண்புமிகு. ஆர். சதாசிவம் பி. ஏ., எம். எல்., அவர்கள் சைவசமய இறை வழிபாட்டின் சாரத்தை மேற்கோள் பலவற்றுடன் எடுத்துரைத்தார்கள்.

அடுத்து பொள்ளாச்சி தொழிலதிபர். திரு. ந. மகாலிங்கம் அவர்கள் விழாக் குழுவினரின் சார்பாக புதுவை மாநில ஆளுநர் மேதகு பி. டி. ஜட்டி பி. ஏ. எல். எல். பி., அவர்களை ஆங்கிலத்தில் வரவேற்று உரை நிகழ்த்தக் கேட்டுக்கொண்டார்கள்.

மேதகு. ஜட்டி அவர்கள் தமது ஆங்கில உரையில் சிவலிங்கத்தின் அமைப்பு முறையினைத் தத்துவ அடிப்படையில் விளக்கி, அரப்பா மொகஞ்சதரோ நாகரிகங்கள் யாவும் திராவிட நாகரிகத்தின் சாயல் படிந்தனவே என்பதனை அகழ்வாராய்ச்சியும், அங்கே அகழ்ந்தெடுக்கப்பட்ட சிவலிங்கத்திருமேனிகளும் மெய்ப்பிக்கின்றன என்பதையும் எடுத்துரைத்து அரிய சமய உண்மைகள் பலவற்றையும் விரித்துரைத்தார்கள்.

அவர்களது ஆங்கில உரையைத் திரு. ந. மகாலிங்கம் அவர்கள் உடனுக்குடன் தமிழில் மொழிபெயர்த்துரைத்தார்கள்.

அடுத்து திரு, ந. மகாலிங்கம் அவர்கள் சிறப்புரை நிகழ்த்துகையில், கோயில்களும், திருமடங்களும் பண்டு போலன்றி தற்காலத்தே வருவாய் குன்றிவிட்டன; மக்கள் அனைவரும் தத்தம் உழைப்பா லீட்டும் சிறுசிறு காசுகளைத் தந்தேனும் கோயிற் பணிகளைச் சிறக்க நிகழ்த்த முன்வரவேண்டும். மக்களுக்கும் திருக்கோயில்களுக்கு மிடையே நெருக்கமான பிணைப்பிருத்தல் வேண்டும் என எடுத்துரைத்தார்கள்.

அடுத்து; தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி சித்தாந்தப் பேராசிரியர், தருமையாதீனப் புலவர், மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் உந்தி களிறு என்ற பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

இரவு 9 மணியளவில் சிறப்பு நிகழ்ச்சியாகப் பட்டிமன்றம் ஒன்று தொடங்கப் பெற்றது.

ஆரூரர் அருந்தமிழில் விஞ்சி நிற்பது ‘தொண்டு நெறியா தோழமை நெறியா’ என்ற பொருள்பற்றிய பட்டிமன்றத்திற்கு

சென்னை 'கலைமகள்' ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வர் திரு. கி. வா. ஜெகந்நாதன் எம். ஏ., அவர்கள் தலைமையேற்றுப் பட்டி மன்றப் பாங்கினை விளக்கி, பங்கேற்போரை அறிமுகப் படுத்தி னார்கள்.

'தொண்டுநெறியே' என்ற தலைப்பில் லால்குடி பட்டிமன்ற மணி. புலவர். திரு. கீரன் அவர்கள் கட்சித்தலைமை யேற்க அவரைத் தொடர்ந்து திருவையாறு அரசர் கல்லூரிப் பேரா சிரியர் வித்துவான் திரு. சொர்ணகாளீஸ்வரன் அவர்கள், தருமபுரம் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர், திரு. இரா. செல்வக்கணபதி அவர்களும் வாதிட்டனர்.

'தோழமை நெறியே' என்ற தலைப்பில் திருச்சி தேசியக் கல்லூரி விரிவுரையாளர் திரு. சோ. சத்தியசீலன் எம். ஏ. பி. டி. அவர்கள் கட்சித்தலைமையேற்க அவரைத் தொடர்ந்து, புத்த ஞம்பட்டி. நேரு நினைவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு. அ வ. இராசகோபாலன் எம். ஏ. அவர்களும், சென்னை, கந்தசாமி நாயுடு கலைக்கல்லூரி விரிவுரையாளர் திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ., அவர்களும் வாதிட்டனர்.

நடுவர், ஆரூரர் அருந்தமிழில் விஞ்சி நிற்பது 'தோழமை நெறியே' என்று இருதரப்பு வாதங்களையும் சீர்தூக்கி முடிவு கூறினார்கள்.

இரவு 12 மணி அளவில் பட்டிமன்ற நிகழ்ச்சிக்குப்பின் சென்னை குமாரி கௌரி குழுவினர் 'மாணிக்கவாசகர்' என்ற பொருள்பற்றி இன்னிசைக் கதை நிகழ்த்தினர். இரவு 1-30 மணி அளவில் மூன்றும்நாள் விழா நிறைவுற்றது.

ஐயாறப்பன் - அறம்வளர்த்த நாயகியாரொடு குடமுழுக்குக் கொண்டருளிய திருநாளான 31—3—71 புதன்கிழமை மாலை 6 மணியளவில் திருநந்திதேவர் திருக்காவணத்தில் மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடியது. அற்றைத் திருநாள் 'மணி வாசகர் - உமாபதிசிவம்' ஆகிய பெருமக்கள் நினைவைச் சிறப் பிக்கும் திருநாளாக அமைக்கப்பெற்றிருந்தது.

மங்கல இசையாக நாதஸ்வரம் முழங்க, திருவாவடுதுறை திரு. விசுவலிங்கம், திரு. சபாபதி குழுவினர் திருமுறை இன்னிசை வழங்க விழா தொடங்கப்பெற்றது.

குடமுழுக்கைக் கண்டுகளித்த புண்ணியப் பேறுபெற்று பெரு மக்களை எல்லாம் விழாக்குழுவினர் சார்பாகக் கட்டளை சுவாமிகள் அவர்கள் வரவேற்றார்கள்.

பேரூர், ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் திருமடம், வித்துவான், தவத்திரு. இராமசாமி அடிகளார் அவர்கள் வாழ்த்துரை வழங்கி யருளினார்கள்.

சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு என். கிருஷ்ண சாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் விழாத்தலைமை பூண்டு சிறப்புரை நிகழ்த்துகையில், திருக்கோயில்கள் மக்களுள்ளத்தே நமக்குச் சொந்தமானவை என்ற எண்ணம் பெருகவேண்டு மென எடுத்துரைத்தார்கள்.

சென்னை. இந்துசமய அறநிலையத்துறை ஆணையர், திரு. கே. எஸ். நரசிம்மன் பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்., அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

தருமபுரம் ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான், திருமதி. ப. நீலா அவர்கள் ' மதுரவாசகம் ' என்ற பொருள்பற்றிக் கனிவுடன் உரையாற்றினார்கள். தருமபுரம் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம் மல், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் ' இசைப்பா எழில்நலம் ' என்ற பொருள்பற்றி ஒன்பதாந் திரு முறையின் நலங்கொழிக்கும் பாடல்கள் பலவற்றைச் சுவைபட விளக்கிப் போந்தார்கள்.

அடுத்துத் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரிப்பேராசிரியர் வித்துவான், திரு. மு. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் ' பதினொ ராந் திருமுறை ' பற்றிச் சிறப்புரையாற்றினார்கள்.

இறுதியாக திருச்சி தேசியக்கல்லூரிப் பேராசிரியர், திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ., அவர்கள் ' வேரித்தாரான் ' என்ற பொருள்பற்றி சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தில் இளையான்குடிமாறனார்க்குச் சூட்டப்பட்ட ' வேரித்தாரான் ' என்ற பெயர்ப் பொருத்தத்தை வரலாற்றுச்சுவை பொதுள அழகுற விள்க்கிப் பேசினார்கள்.

அடுத்து சென்னை வானொலிநிலைய இசை அமைப்பாளர் திரு. கே. சி. தியாகராசன் அவர்கள் ' அப்பர்பெருமான் ' அருள் வரலாற்றை சுவை குன்றாது இன்னிசைக் கதையாக நிகழ்த்திச் சிறப்பித்தார்கள்.

நான்குநாள் விழாவிற்கும் சிறப்புச் செய்தாற்போலே இரவு 12 மணியளவில் திருச்செந்தூர் திருமதி இராஜம் குழுவினர் 'செந்திற்குறவஞ்சி' நாட்டிய நாடகத்தினை மிகச்சிறப்பாக மேடையேற்றி மகிழ்வித்தனர். இரவு 2 மணியளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் ஐயாறப்பன் அருளாலும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆசியாலும் இனிதே நிறைவெய்தின.

விழா நாட்களில் பதினாயிரக்கணக்கான பெருமக்களும், தாய்மார்களும், இளைஞர்களும், சிறுவர்களுமாக மாநாட்டுப் பந்தல் நிரம்பி வழிந்தது. சமயப்பற்றையும், சாத்திர நுண்ணுணர்வுகளையும், இலக்கியச் சிந்தனைகளையும். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் பேரருளையும் வாரிவழங்கிய திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் அன்பர்கள் உள்ளங்களில் அழியா ஓவியமாகப் பதிந்து நிற்குமென்பதில் ஐயமில்லை.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Thiagarajaswamy Devasthanam, Tirukkuvalai.

18—3—71 அன்று திருக்கோளிலி என்னும் திருக்குவளை க்ஷேத்திரத்தை தெரிசிக்கும் பேறு எமது தலவழிபாட்டுக் குழுவினருக்கு கிடைத்தது. கோயிலில் உள்ள மூர்த்திகள் நன்கு அலங்கரிக்கப்பட்டு அர்ச்சகர்கள் நல்ல முறையில் வழிபாட்டினை நடத்திவைத்தனர். கோயில் நிர்வாகிகள் உடனிருந்து ஒத்துழைப்பு நல்கியது போற்றுதற்குரியது. தருமை ஆதீனக் கோயில் என்றால் சுத்தத்திற்கும் தூய்மைக்கும் இருப்பிடம் என்பது பிரசித்தம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

கே. கு. முத்தையா,
அமைப்பாளர்,
சேலம் மாவட்ட சன்மார்க்கத் தலவழிபாட்டுக் குழு.
நங்கவள்ளி - சேலம்.

# சிந்தியாகமம்

வித்துவான்,

திரு, வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

## சதாசிவதோற்றம்

(மலர் 30 இதழ் 4, பக்கம் 229 இன் தொடர்ச்சி)

இனி யிந்தப் பஞ்சசத்திகளுடைய கூட்டத்திலே சதாசிவந்தோன்றும். அதெப்படி யென்னில், ஆத்மாக்கள் சிந்தித்தும் பூசித்தும் வணங்கியும் முத்தியை யடையும் பொருட்டு முன் சொன்ன பரமசிவமானது தனது கருணையினாலே சிவத்திலே யாயிரத்தொருகூறு சதாசிவமாகி விளங்கும். இனி யிந்தச் சதாசிவமானது ஐந்துபேதமாக விருக்கும் அது வென்னெனில் சிவ சாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் கர்த்துரு சாதாக்கியம் கன்ம சாதாக்கியம் என்பன. ஆகப்பஞ்சபேதமுங் கண்டுகொள்க.

இந்தச் சதாசிவமானது பாவனை இறந்துநின்ற பரமசிவமானது பாவனையாகவந்ததென்றறிக. தேகமே சத்தியாகவும் தேகியே சிவமாகவுமிருக்கும் இந்த மூர்த்தமே அருபாருபமென்று சொல்லப்படும். இனி பஞ்சசாதாக்கியந் தோன்றிய மூலஞ் சொல்லா நின்றது.

முன் சொன்ன பராசத்தியிலே பத்திலொரு கூறு பொருந்தித்தோன்றிற்றுச் சிவசாதாக்கியம். ஆதிசத்தியிலே பத்திலொருகூறு பொருந்தித் தோன்றிற்று அமூர்த்திசாதாக்கியம். இச்சாசத்தியிலே பத்திலொரு கூறு பொருந்தித் தோன்றிற்று மூர்த்தி சாதாக்கியம். ஞானசத்தியிலே பத்திலொரு கூறு பொருந்தித் தோன்றிற்று கர்த்துரு சாதாக்கியம். கிரியாசத்தியிலே பத்திலொரு கூறு பொருந்தித் தோன்றிற்று கன்ம

சாதாக்கியம். இப்படிப் பஞ்சசாதாக்கியமுந் தோன்றின மூல வரலாறு அறிக.

இந்தச் சாதாக்கியங்களைந்திலும் சுத்தமாயையின் காரியமான பஞ்சப் பிரம மந்திரங்கள் கூடிநிற்கும். அவை ஈசானம் தற்புருடம், அகோரம் வாமதேவம், சத்தியோசாதம் எனவறிக. இனி யிந்தப் பஞ்சப்பிரமமந்திரமே சதாசிவத்திற்கு ஐந்து முகங்களாகப் பெயர் பெற்றிருக்கும்

இனி முன்சொன்ன கன்ம சாதாக்கியந்தானே சிவலிங்க ரூபமாக வெழுந்தருளியிருக்கும். விந்துவாகியதே பீடமாயிருக்கும். நாதமானதே இலிங்க நிலையாகவிருக்கும். விந்துவே உகாரரூபமாய்க் காரியப்படும். நாதமே அகாரமாகக் காரியப்படும். ஆகையாலே அகார உகரமே சிவலிங்க ரூபமென்றறிக. இதற்குப் பிரமாணம் திருமந்திரம்.

'எட்டு மிரண்டு மறியாத வென்னை
யெட்டு மிரண்டு மறிவித்தா னென்னந்தி
யெட்டு மிரண்டு மறிவா லறிந்தபின்
னெட்டு மிரண்டு மிலிங்கம தாமே" 986

என்னும், உண்மைவிளக்கம்

"எட்டு மிரண்டு முருவான லிங்கமே
நட்டம் புதல்வா நவிலக்கேள் — சிட்டன்
சிவாய நமவென்னுந் திருவெழுத்தஞ்சாலே
யபாயமற நின்றுடுவான்" 31

என்றும் வருவனவற்றுற் காண்க.

குறிப்பு:- எட்டு - எட்டு வடிவமாகிய அகரம் நாதம். இரண்டு - இரண்டு வடிவமாகிய உகரம்.

சிவலிங்க சொரூபமெப்படியென்னில், கிரியா சத்தியே கீழ்ப்பீடம். ஞானசத்தியே நடுக்கண்டம். இச்சா சத்தியே மேற்பீடம். ஆதிசத்தியாகிய திரோதான சத்தியே யுள் வட்டம். பராசத்தியே லிங்கம், இதற்குயிர் முன்சொன்ன பரமசிவமேயென்றறிக. இதற்குப் பிரமாணம் சிவஞானதீபம்.

" நற்பரமாங் கிரியையடிப் பீடமாகும்
நண்ணரிய நடுக்கண்டம் ஞானமாகும்
சொற்பரவு மேற்பீட மிச்சாசத்தி
சொல்லிலத னுள்வட்டம் திரோதையாகும்
விற்பரவும் விந்துநிலை பரைய தாகும்
வீறுபர சிவமதுவே லிங்கமாகும்
அற்புதமா மகம்புறமு மொன்றும் நேயத்
தருந்தவர்கள் சிவபூசை பொருந்துமாறே "

இன்னம் வருவனவற்றுற் காண்க.

இனியிப்படித்தாகிய சதாசிவத்தை அறிவுடைய ஆத்மாக்களானபேர் தங்களுக்குக் கொடிதாகிய செனனமரணமறும் படிக்கு ஞானம் வருகிற நிமித்தமாகக் கசியப்பட்ட கருத்தாகச் சிவபூசை செய்வார்களாதலாலே சதாசிவ தேவருடைய அங்க உபாங்கமெப்படியென்னில், சொல்லுதுமது.

ஆசனம் கமலாசனம். திருமேலி படிகவன்னம். ஐந்து முகத்திலும் விளங்கப்பட்ட திரிநேத்திரங்கள் பதினைந்து. அத்துவாவே அவயவங்களாயிருக்கும். ஈசானமுகம் மேல் நோக்கியபடி படிகவன்னமாயிருக்கும். தற்புருடங் கிழக்காகக் குங்குமவன்னமாயிருக்கும். அகோரம் தெற்காக அஞ்சன வன்னமாயிருக்கும். வாமதேவம் வடக்காக ரத்தவன்னமாயிருக்கும். சத்தியோசாதம் மேற்காக வெண்மையாகவிருக்கும். இருதயம் சந்திரனிறமாகவிருக்கும். சிரசு தூமநிறமாக விருக்கும். சிகை சிந்தூர நிறமாகவிருக்கும். கவசம் கார் வன்னமாகவிருக்கும். நேத்திரம் மின்னொளியாயிருக்கும் அத்திரம் சூரியப்பிரகாசமாகவிருக்கும்.

கைகள் பத்துக்கு மாயுதமெப்படியென்னில், சூலாயுதம், வேலாயுதம், மழு, வாளாயுதம், அபயம் ஆக ஐந்தும் வலப்புறம்.

பாசம், எரியகல், பாம்பு, தொரட்டி, மணி ஆக ஐந்தும் இடப்புறமென்றறிக.

இப்படிப் பாவிக்கவே பாவனைக்கெய்தாத சிவம் பாவனையிலகப்படுமாறெங்ஙனமென்னில், ஒருவன் விஷந்தீண்டி மூர்ச்

சையை யடைந்தபோது கருடபாவனை பண்ணவே கருடன் உருத்தோன்றுது வந்து எப்படியொருவனடைந்த விஷமூர்ச் சையைத் தீர்க்குமாறுபோலச் சிவமும் பாவனைக்குள் உருத் தோன்றுது வந்து நின்று ரட்சிக்குமென்றறிக. இதற்கு மூல மந்திரம் யாதென்னில், உயிரெழுத்திலே முதலாவதும் ஆருவ தும் பதினாலாவதும் கூட்டியுச்சரிக்கப் பிரசாத மந்திரமாம். இதுவே மூலமென்றறிக.

சதாசிவதோற்றம் முற்றுப்பெற்றது.

## மகேஸ்வரபேதம்

இங்ஙனஞ் சொல்லிவந்த சதாசிவ கன்ம சாதாக்கியத் திலே ஆயிரத்திலொருகூறு பொருந்தித் தோன்றிற்று மயே சுர மென்றறிக. இந்த மயேசுரமானது அநேக கோலங்க ளாகத் திருமேனிகொண்டு சிருட்டி திதி சங்கார திரோபவ அனுக்கிரகமாகிய பஞ்சகிருத்தியங்களைப் பண்ணிக்கொண்டு விளங்கும், அதிற் பிரதான ரூபமானது இருபத்தஞ்சு பேத மாக விருக்கும். அதெப்படியென்னில், திருநாமம், சந்திர சேகரன், பார்வதிசமேதன், ரிஷபவாகனன், ஆனந்தநடேசன், கலியாணசுந்தரன், பிக்ஷாடனன், மன்மத தகனன், கால சங்காரன், திரிபுரத்தை யெரித்தவன், கங்காதரன், யானையுரி போர்த்தோன், வீரபத்திரன், அரியரன், அர்த்தநாரீசுரன், வயிரவன், கங்காளன், அர்ச்சுனனுக்குப் பாசுபதங் கொடுத்த வன், தண்டீசனுக்கு வரங்கொடுத்தவன். நஞ்சுண்டோன், விக்கினேசுரனுக் கருள்புரிந்தவன், சோமாஸ்கந்தன், ஏக பாதன், சுகாதனன், தெட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவன் ஆக இருபத்தைந்து திருநாம பேதங்களுமறிக.

இருபத்தைந்து பேதமான மயேசுரத்திலே ஆயிரத்தொரு கூறு பொருந்தித் தோன்றிற்று ருத்திரனென்றறிக. இன்னம் மகேசுரத்திலே கோடியிலொருகூறு பொருந்தித் தோன்றினர் விஷ்ணுவும் பிரமாவுமென்றறிக

சோமசூரிய அக்கினி மூன்றுந் திரிநேத்திரத்திற்றோன் றின. விக்கினேசுரர் கண்டத்திற்றோன்றினர் சுப்பிரமணி யர் இருதயத்திற் றோன்றினர். பனிரண்டு சூரியருமுந்தியிற்

ரூன்றினர். உரோமத்திலே ரிஷிகளுந் தோன்றினர்கள் என்றறிக,

## சத்தி பேதம்

இனிச் சத்திபேத மெப்படியென்னில், விந்துசத்தியிலே பத்திலொருகூறு ஆதிசத்தி. ஆதிசத்தியிலே பத்திலொரு கூறு கெளும்பிசத்தி. கெளும்பிசத்தியிலே பத்திலொருகூறு ஈஸ்வரி சத்தி. ஈஸ்வரி சத்தியிலே பத்திலொருகூறு மனோன் மணிசத்தி.* மனோன்மணி சத்தியிலே கோடியில் ஒரு கூறு கவுரி சத்தி. கவுரி சத்தியிலே கோடியிலொருகூறு லட்சுமியும் சரஸ்வதியும் துர்க்கையும். இன்ன பேதங்களாக அநேக சத்திகள் தோன்றினவென்றறிக.

பதியிலக்கணம் முற்றும்.

---

* உன்னுமம் மனோன்மணீயாமதனொளிகோடிகூற்றில்
மன்னுநற் கவுரிதோன்றி மற்றவள் கோடிகூற்றில்
தன்னிலே செல்வியோடு சரஸ்வதி துர்க்கையாதி
பின்னமாயனந்தசத்தி பிறந்தனரென்று கொண்ணீ

—மெய்மொழிச்சரிதை - பதிபேதம் - 49.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

Visited the temple. Thanks to all concerned.

Mrs. & Mr. G. Tirumal I. A. S.

21—3—71. Director of Harijan Welfare,

Madras.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 30. இதழ் 3, பக்கம் 136 இன் தொடர்ச்சி )

தருவா யனந்தன் மீதுறங்கு தண்ணம் புயநேத்திரனேனத்(து)
உருவா யனந்த நாட்டரைகீண் டுணராப் பதனே
பணைகளிற்செங்
குருவா யனந்தம் பேட்டினொடு குலவை யாரு
வருமறைசொல்
திருவா யனந்த நின்றெழும்பே சிறியேன் செய்யத்
திருவருளே

இச்செய்யுள் விற்பூட்டுப் பொருள்கோள் ஆகும். திருவருளே தருவாய் என முடிவுறுவதால்.)

(இ–ள்) அனந்தன்மீது உறங்கு தண் அம்புயம் நேத்திரன் ஏனத்துஉருஆய் - ஆதிசேடனாகிய பாம்பணையின்மீது பள்ளி கொள்ளும் குளிர்ந்த செந்தாமரைக் கண்ணன் ஆகிய திருமாலானவர் இலிங்கோற்பவ காலத்து திருவடிகாண்பான் வேண்டி பன்றி வடிவம் ஆகி, அனந்தம் நாள்தரைகீண்டு உணராத) பதன் ஏ - (அழலுருவான காலத்து எண் இல் காலம் பூமியினைக் கிண்டித்தேடி, அறியமுடியாத திருவடிகளை யுடையவரே! பணைகளில் செம்குருவாய் அ(ன்)னம் தம்பேட்டின் ஒடு - மருதநிலமாகிய வயல்களில் (நன்செய் நிலங்களில்) செவந்த நிறம் பொருந்திய அலகு (வாயினை) உடைய ஆண் அன்னம் பறவைகள் தம்முடையபெண் அன்னப்பறவைகளுடன், குலவு ஐயாரு! குலாவி விளையாடும் வளப்பம் பொருந்திய திருவையாற்றுத் திருப்பதியின்கண் எழுந்தருளிய பரம்பொருளானவரே! அருமறை சொல்திருவா - அறிதற்கரிய வேதங்களால் பெரிதும் போற்றப்படுகின்ற முத்தித்திருவானவரே. அனந்த - முடிவிலாதவரே (அழகியரே) சிறியேன் - அறிவிற் சிறுமையுடையேன்,

நின்தொழும்பு ஏசெய்ய - தேவரீருடைய திருவடிகட்குத்தொண்டு புரிதலையே மேற்கொள்ள, திருஅருள் ஏ தருவாய் - திருவருள் தந்தருள்வீராக. (எ-று) அருமறை சொல் திருவா - வேதங்களை விளங்கத் திருவாய் மலர்ந்தருளிய வித்தகச்செல்வா எனலுமாம். "மறைமுதல் கிளந்த வாயான்" என்பது கொண்டு துணியப் படும். "திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடி" என்பது எட்டாந் திருமுறை.

**அருளா ரமுதப் பெருங்கடலே யகணித்திரையெற்றிடவலறித்**
**தெருளா ரமுத வுவளையினந் திகழை யாரு ! சுரிகுழற்கா**
**மருளா ரமுத தியனவிழி வலையிற் சுழலா தழகியசொற்**
**பொருளா ரமுதத் தொடுமுனை போற்றும் வரம்யான்**
**வேண்டுவனே.**

(இ-ள்) அருள்ஆர் அமுதம் பெரும்கடல் ஏ - அருள் நிறைந்த அமிர்தமயம் ஆகிய பெரிய கடலின் வடிவினரே, - அகணி திரை எற்றிட (நீர் நிரம்பிய) மருத நிலமாகிய பழனங் களில் அலைகள் கரையில் மோதுதலால், அலறிதெருள் ஆரம் உதவுவளை இனம் திகழ் ஐயாரு - (சூலுடைமையால் மொத் துண்டு) கதறிக்கொண்டு தெள்ளிய வெள்ளிய முத்துக்களை ஈனுதல் செய்கின்ற சங்குக்கூட்டங்கள் விளங்குகின்ற வளமார்ந்த திருவையாற்றில் எழுந்தருளிய மகாதேவரே! சுரிகுழல் கா - நெறிப்பினையுடைய கூந்தலாகிய சோலையினையும், மருள் ஆரம் உததி அன்விழி - மயக்கமுறுத்தும் முத்து பவழங்களையுடைய கடல்போன்ற பரந்த விழிகளையும், (உடைய மங்கையர்தம்) வலை யில் சுழலாது - காமவலையின்கண் சிக்கிக்கொண்டு திரிதலையுரு மல். அழகிய சொல் பொருள் ஆரம் முதத்தொடும் - வனப்புறு மொழியும் மொழிக்கிசைந்த பொருளும் உடைய சொன்மாலை யினை. உவகையோடும், (கொண்டு) உ(ன்)னையே போற்றும் வரம் யான் வேண்டுவன் - தேவரீரையே துதிக்கல்உறும் வர மொன்றினை மாத்திரம் அடியேன் விரும்புகின்றனன். எ - று). ஏகாரம் - அசைநிலை.

(கு - உ) பிறவொன்றினையும் வேண்டி நிற்கின்றிலேன். சுமையாகிய சுரித்த கூந்தலை எனவும் சுரிந்த கூந்தலினையுடைமை யின் கா எனவும், பொருள்கோடல் தரும். அகணி - மருதநிலம். முதம் - உவகை (களிப்பு), ஆரம் - முத்து நீர்.

" கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை கரையிலா கருணை
மாகடலை என வரல்போல அருளா ரமுதப் பெருங்கடல் "

என்றார்.

வனமா தரிக்கு மொழியுமையாள் வயங்கு பங்கா
வெனவிபுத(ர்)
இனமா தரிக்கு வலயமுற்றே யிறைஞ்சு முன்னுள்
சரணெனப்போந்
தனமா தரிக்குங் கடனுனக்கே தறுகட் சுவேத மால்விடைவா
கனமா திரிக்கு மெய்யா! மான் கையா வையாற் றெம்பரனே.

(இ - ள்) வனம் (வன்னம்) மாதர் இக்குமொழி உமையாள் வயங்குபங்கா - நிறமும், அழகும் நிறைந்த கரும்பினும் இனிய சொற்களையுடைய உமாதேவியாரை. இடதுபாகத்தில் அமர்த்தி யருளிய விளங்குகின்ற பங்கினையுடை துங்கப்பெருமானே!, என - என்று, விபுதர்மாதர் இனம் இக்குவலயம் உற்று ஏ இறைஞ்சும் உன்தாள் - தேவமாதர் கூட்டங்கள் இப்புவனியிலுள்ள தெய் விகத் தன்மையுற்ற இத்திருவையாற்றுப் பெரும்பதியினையெய்தி, மனமொழிமெய்களால் வணங்கியருளப்பெறும் தேவரீருடைய திருவடிகளையே, சரண் என போந்தனம்- பற்றுக்கோடு (கதி) என்று உற்று அடைந்துளோம். (ஆதலின்), உனக்கு ஏ ஆதரிக்கும் கடன் - தேவரீருக்கே அடியேங்களை அணைத்து ஆதரிக்கும் கடப்பாடு ஆகும். தறுகண் சுவேதம் மால்விடை வாகனம் ஆ(க)தரிக்கும் மெய்யா - அஞ்சாமையினையுடைய வெண்மை நிறம்பொருந்திய திருமாலானவர் இடபவூர்தியாக உற்றுத்தாங்கும் அருள் திருமேனியினையுடையவரே! மான் கையா - மானினைத்தாங்கிய திருக்கரம் உடையவரே, ஐயாற்று எம்பரன் ஏ - திருவையாற்றுப் பதிக்கண்மேவிய பரமேசுவரனே! ஆதரிக்கும் கடன் உனக்கேயாகும் என முடிக்க. (எ - று)

(கு - ரை) "மால்விடையாய் தாங்கினன்காண் சாழலோ" என்பது திருவாசகம். இதனையடுத்து மால்விடை வாகனமாத ரிக்கு மெய்யா என்றனர். விபுதர் - தேவர். இக்கு - கரும்பின் சாறு. குவலயம் - பூமண்டலம்; மாதர் - அழகு (காதல்) மெய் - கருணைத்திருமேனியாம்.

பரவா ரணங்குயிற்று மந்தாபதர் வாழ்வுற மும்மதச் சிறுநேத்
திரவா ரணங்குன் றிட வுரித்த தேவே! யையாற் றிறைவசுப
கரவா ரணங்கு கொங்கை மின்னார் காமத்துழலாதருள்
பொறிச்சூட்
டரவா ரணங்கு வளைமலரு மணிவோய் பணிவோர்க்
கருள் சிவமே"

(சொ - ள்) பரவு ஆரணம் குயிற்றும் - யாண்டும் யாவரும் போற்றுதலைப் புரிகின்ற நான்கு மறைகளையும் (நன்கு ஒலிவழியொலித்தும் ஒலிக்கப்படும் பொருளை, உள்ளவாறுணர்ந்து யாரும் எளிதின் உணர்ந்துகோடற்பொருட்டு) கூறுதலைச்செய்யும்; அம்தாபதர் - (செயற்கரிய செய்து முடிக்கும்) வனப்பு மீக்கூர்ந்த தவச்செயலையுடையவர்கள், வாழ்வு உற - (தவத்திற்குறும் ஊற்றினை யொரீஇ) தவவாழ்க்கையினை இனிதுற நடாத்தவும்; மும்மதச்சிறு நேத்திர(ம்) வாரணம் குன்றிட உரித்த தேவதேவே - மும்மதங்களையும் சிறிய கண்களையும் உடைய யானையசுரன் வலியழிந்து தொலையுமாறு, அதன் வலிய தோலினையுரித்த ஆடையாகப் போர்த்துக்கொண்ட மகாதேவரே! ஐயாற்று இறைவ - திருவையாறெனும் பெரும்பதியில் திருக்கோயில் கொண்டருளியவரே! சுபகர - மங்கல காரியங்களைச் செய்கின்ற சிவபெருமானே; வார்அணங்கு கொங்கை மின்ஆர் காமத்து உழலாது அருள் - கச்சினைமீறிய கொங்கைகளையுடைய மின்னல் போலும் இடைபொருந்திய மங்கையர்தம் மயலாகிய காமத்திடைச் சிக்குண்டு வருந்தாது திருவருள் பாலிப்பீராக (காமதகனராகலின்;) பொறிசூட்டு அரவு ஆர்அண் அம்குவளை மலரும் அணிவோய் - புள்ளியினையும் உச்சிக்கொண்டையினையும் உடைய பாம்பினையும் திருவாத்தி மலரினையும் நெருங்கிய அழகிய நீலோற்பல மலரினையும சடாபாரத்தில் தரித்தவரே! பணிவோர்க்கு சிவமே அருள் - தன்னடித் தொண்டர்கட்கு சிவமாகிய முத்திப் பேற்றினையருளுகின்றவரே; எ-று. அருளுகின்ற சிவமே என விளிக்கலுமொன்று.

(கு - ரை) ஆர் - முதலாகுபெயர். மலரினைக் குறித்தலால். மின்னார் - மின்போலும் மங்கையர். சூடு - சூட்டென விரட்டித்தது. குவளை - செங்குவளை, கருங்குவளையாம். செங்கழுநீர் என்னலும் ஆம்.

(தொடரும்)

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 30, இதழ் 3, பக்கம் 159 இன் தொடர்ச்சி)

## 40. வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியது

பண்கொண்ட வேதம் முதல் இடை ஈறு நாடரிய பரன் மாம னுகிவந்து வென்றதனைக் கண்டோம். இனி அவனே வரகுணன் அடைந்த பழி விலக்கிச் சிவலோகம் காட்டியமை காண்போம்.

இயமானன், இந்து, இரவி, எரி, வான், நிலம், சலிலம் காலென்னும் எண்பகுதியின் மயமாகிய சோமசுந்தரப் பெருமா னிடம்மனம், மொழி,மெய்யொன்றிய பக்தி செய்பவனும்; வடிவில் மன்மதனை வென்றவனும், சிறப்பால் இந்திரனை நிகர்த்தவனும், ஒளியில் சூரியனுக்கிடானவனுமான வரகுணபாண்டியன் மதுரை யில் ஆள்கிருன். மறைகளில் வன்மை பெற்றுள்ளதால் – யாகங் களைத் தவருது செய்வதால் பிரமனை ஒத்துள்ளான். அட்ட லக்குமிகளின் போகத்தோடு 'அரசோச்சுவதால் திருமாலை அவ னுக்கிணை கூறலாம். ஐம்பொறிகளை வென்று – பகை கடந்த பாங்கில் அரனுகவும் விளங்குகிருன்,

### வேட்டைமேல் நாட்டம் :

வேட்டை விரும்பி ஒருநாள் அடவிபுகுந்தான், உழுவை, யானை, ஏனம் முதலியவற்றை கோட்டின்கண் ஏறித் தேரிரவி அந்திமாலையில் இருளூட்டும் வரை கொன்று குவித்தான். பின்பு மதுரை நோக்கித் திரும்பிவந்தான். வழியில் மயக்கத்தால் முகத்தில் வேர்வை துளிக்கப் படுத்துக் கிடக்கும் அந்தணனை அரசனின் குதிரை இடறிக் கொன்றது. ஈதொன்றும் அறியாமல் அரசன் தன்மனை புகுந்தான்.

இறந்த அந்தணனை அவனினத்தவர்கள் சுமந்து வந்து அரண்மனை வாயிலிலிட்டுக் காவலனிடம் முறையிட்டனர், தமிழ் மாறனும் அதுகேட்டு அகம் மிக வருந்தி அவர்களுக்கெல்லாம்

நிறையப் பொன்னும் மணியும் கொடுத்து இறந்தவனுக்கும் ஈமக் கடன் முடித்தான். அந்த அந்தணனைக் கொன்ற கொலைப்பாவம் வரகுணனைப் பற்றிக்கொண்டது. அப்பாவம் நீங்கவேண்டி அந்தணர்கள் சொன்னபடியே ஆற்றங்கரையில் அறிவுசான்ற அந்தணர் பலருக்கும் ஐவகையான உண்டியளித்தான், முப் பெருந் தெய்வமாக விளங்குகின்ற அரசமரத்தைச் சுற்றியும், அறுகம்புல்லைக் கொய்து ஆக்களுக்குக் கொடுத்தும் கழுவாய் தேடினன். அகமருடண மந்திரத்தால் யாகம் செய்தும், ஆவின் கோடு தோய்ந்த குளிர்புனலில் குளித்தும் அதனையே குடித்தும் இப்படிப் பல செயல் செய்தும் அப்பிரும்மகத்தி அவனை விட்டக லாமல் நெய்பெய்த ஆகுதித்தீபோல் பெருகிப் பற்றியது.

கொலைப்பாவம் இவனைப் படாதபாடும் படுத்தியது. ஒரு சமயம் ஏங்கும்; பின்பு பெருமூச்சுவிடும்; குன்றுபோல ஓங்கும்; உடன் குறுகும்; ஆரவாரம் செய்யும்; முன்னும் பின்னுமாக வந்து இவனைப் பற்றிக்கொள்ளும்; பிளந்த தன் வாயை மெல் லும்; பழிதா - என்று கேட்டு நிற்கும். இப்படி அதன் பிடியி லகப்பட்டு மாசுபட்ட மணிபோல பணி (பாம்பு) வாயிற்பட்ட தீந்தண் மதிபோல வேழமுண்ட விளாம்பழம் போல மன்னன் அறிவழிந்து சாம்பினன்.

## பழிபோக வழிதான் என்ன?

மறையோர்கள் மன்னவனின் பிரும்மகத்தி நீங்காமைகண்டு பின்னும் வேறோர் உபாயங் கூறினர்; 'நான்முகன் சிரங்கொய்த கூடற்கதிபன் கோயிலை ஆயிரத்தெட்டுமுறை நாள்தோறும் வலம் வந்தால் பத்து நாட்களில் உனது பழி நீங்கும்' என்றனர்.

வேந்தனும் அப்படியே திருக்கோயிலுட் புகுந்து இந்தி ரனின் பழிதீர்த்த ஏந்தலே! வேதியனின் பாதகந் தீர்த்த பரம் பொருளே! கங்கை தாங்கும் கண்ணுதலே? அடியேனைப்பற்றி வருத்தும் கொலைப்பாவம் நீங்கவும் வழிகாட்டுக என்று பணிந் தான்.

விழியா யிரத்தோன் பழிதீர்த்தனை வேதியன்றன்
கழியா மாபா தகந்தீர்த்தனை கௌவைக் கங்கைக்
கழியா றலைக்குஞ் சடையா யெனைத் தொட்டலைக்கும்
பழியா னதுந்தீர்த் தருளென்று பணிந்து வீழ்ந்தான்.

விண்ணினின்றும் ஒலி எழுந்தது. அரசே 'ஒரு அடிக்கு ஒரு அஸ்வமேத யாக பலனுண்டு. நீயோ ஆயிரத்தெட்டுமுறை

நாள்தோறும் வலம் வருகின்றாய். உன்பக்திகண்டு மகிழ்ந்தோம். பொன்னேடு முத்தங்கொழிக்கும் பொன்னிநாடன் உன்மேல் படையெடுத்து வரும்போது அவனைத் துரத்திக் கொண்டு நீயும்செல். நம்மை நாமே பூசித்துக்கொண்டிருக்கும் திருவிடைமருதூரை நீ யடைந்தால் உன்பாவம் விலகும் என்று' - கேட்டது. உரகன் உச்சியின் சுமையைத் தன் தோளில் தாங்கி அவனுக்காறுதல் தரும் பாண்டியன் வரகுணன் இது கேட்டு அளவிறந்த மகிழ்ச்சிகொண்டான்.

## பாவமகற்றிய இடைமருது ஈது :

சின்னாட்களில் புலிக்கொடியோன் பாண்டி நாட்டின்மேல் படையெடுத்தான். போரில் பாண்டிப் படைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சோழப்படை பின் வாங்கியது. சுறவக்கொடியோன் சோழனைத் துரத்துக்கொண்டே வந்து பூசப்படித்துறையில் (திருவிடைமருதூரில் - தைப்பூசத்தன்று பெருமான் தீர்த்தங் கொடுக்கும் காவிரித் துறை) நீராடி கோயிலுக்குள் கீழைக் கோபுர வாயில் வழி புகுந்தான். பின்தொடரவியலா பாசத் தளையும் பிரம்மகத்தியும் அக்கீழைக் கோபுர வாயிலிலேயே தங்கி விட்டன. சுருதியென்னும் வண்டுகள் சூழ்ந்து முரல மருதினிடையில் செந்தேனைத் தித்திக்கும் சிவபெருமானை வாயங்காந்து பருகி - உருகி நின்றான். சொற்பதங்கடந்த சோதியன் தன்னடி வந்தித்து நிற்கும் வேந்தனிடம் கீழைவாயிலில் பிரமச்சாயை தங்கி பற்றக் காத்துள்ளது. ஆகவே மேலைக் கோபுரவாயில் வழியாக மதுரை செல்க - எனப் பணித்தான்.

வரகுணனும் பழைய எழிலும் நலனும் திரும்பப் பெற்றவனாக இறைவனின் பெருங்கருணையை நினைந்து அங்கு பல நாள் தங்கி தன்பெயரில் அம்மேலைக்கோபுர வாயிலைப் புதுக்கிப் பணிபல செய்தான். பின்பு மதுரை மீண்டான்.

## சிவலோகங் காண ஆசை :

பன்னாட்களுக்குப் பின் வரகுணன் ஒரு சிவராத்திரியின் போது மதுரைப் பெருமானை வலம்வந்து வணங்கிய பின் 'அடியார் பலர் புடைசூழ சிவபுரத்தில் தேவரீர் வீற்றருளியிருக்கின்ற கோலத்தை அடியேன் காண அவாவினேன்' என்று பலமுறையும் விண்ணப்பித்துக்கொண்டான். அன்பினுக்கெளிய அண்ணல் அவ்வுலகை இவ்வுலகிடை வருவித்து இன்று காட்டுதும் இவற்கென்று கோடி சூரியர்கள் இணைந்தொளிந்தாலும் மின்மினிபோலிருக்கும் சிவபுரத்தை மதுரையில்

அழைத்தார். திருநந்திதேவரைக் கூப்பிட்டு என்னிடம் அன்பு பூண்டவனாகிய வரகுணனுக்கு இச்சிவலோகத்தைக் காட்டுவாயாக - எனப்பணித்தார். நந்தியும் உத்திரவுப்படியே காட்டத் தொடங்கினார்.

## சிவலோகம் இதுவே :

கர்ப்பூர மணத்தோடு கூடிய இளைய காற்றினால் உதைப்புண்டு ஆயிர யோசனை மணங்கமழும் நூறாயிரம் இதழ்களோடு கூடிய வெள்ளைக்கமலங்கள் பூத்த நீரோடைகள் அச்சிவபுரத்தைச் சூழ்ந்துள்ளன. தேவப்பெண்கள், நாரத தும்புருவர் இசைக்கும் கானம் எங்கும் நிறைந்திருந்தது.

பாற்கடல்போல் அமுதநீர் நிறை அகழி, பொன்செய் புரிசை, நவமணிகுயிற்றிய மாட மாளிகைகள் அங்கிருந்தன. இவைகளைப் பாண்டியனுக்குக் காட்டிய பின்னர் அங்கே கூட்டங் கூட்டமாக நிற்கும் அடியார் பலரையுங் காட்டினார். இதோ இங்கே நிற்பவர்கள் சரியையின் வழிநின்ற தாதமார்க்கத்தார். இவர்கள் புலர்வதன் முன் நீராடி, புனிதனின் ஆலயம் விளக்கி, நந்தனப்பணிசெய்து, அரன்புகழை நவிற்றியும், கேட்டும் சிவ சாலோக்கிய பதத்தில் உள்ளவர்கள்.

இங்கே நிற்பவர்கள் கிரியைக்குரிய புத்திர மார்க்கத்தவர். இவர்கள் தூயராகி மனவொருமையுடன் இறைவனை அருச்சித்து சிவசாமீப்பிய பதத்தில் இருப்பவர்கள். இதோ இங்கே சக மார்க்கமாகிய யோகவழி நின்று சிவசாரூப்பிய பதத்தில் வாழ்பவர் உள்ளார். இன்னும் வேள்வி செய்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், சிவனடியார்களைப் பேணுதல், திருநீறு - திருவைந்தெழுத்திடம் அன்புகொள்ளல் - இப்படியெல்லாம் நல்லொழுக்கம் கைவரப்பெற்று மண்ணில் வாழ்ந்தவர்களும் இங்குள்ளார்கள்.

இப்பால் நிற்கும் இவர்கள் சிவனை அர்ச்சனை செய்பவர்களுக்குதவியும், அரனென்றே கருதி சிவனடியாரைப் பேணியும், தொண்டர்களுக்கு அறுசுவையுணவைப் படைத்தும் புண்ணியம் செய்தவர்கள். அவர்கள் ஆதிசுந்தரக் கடவுளுக்கு ஆலயம் அமைத்தலும் பிற அருச்சனைப் பணிகளும் செய்தவர்கள். திருநீற்றின் வழிநின்று நிலம்புரந்த நின்குடியைச் சார்ந்த முன்னோர்களையும் இங்கே காணுக - என்று அவரவர்களையும் தன் கைப்பிரம்புகொண்டு சுட்டிக்காட்டினார் நந்திதேவர்.

இவர்களுக்கெல்லாம் நாயகமாக ஆகமங்கள் வடிவெடுத்து நின்று இருபுறமும் வாழ்த்த; தும்புரு நாரதர் தேவகான மிசைக்க; வண்டிமிர் கொம்பர் போல அரம்பையர் ஆட; வேழ முகனும் சூரன் கதங்கவிழ்த்த வேலவனும் அருகருகே நிற்க; அண்டர்களும் தொண்டர்களும் அரகர முழக்கம் செய்ய அருட் பெருஞ்சோதியாக வீற்றிருக்கிருன் அமலன். ஒளிமயமாய் விளங்கும் இறைவனை உச்சிமேற் கரங்குவித்து உரைதடுமாற உரோமம் சிலிர்ப்ப வணங்கினுன் வரகுணன். ஆனந்த வெள்ளத்தைக் கண்ணுரப் பருகி இன்புற்றபின் புலன்களும் கரணங் களுந் தன்வசமாகவே தான் மதுரைக் கோயிலினுள் இருப் பதை உணர்ந்தான். தன் பொருட்டு சிவலோகங் காட்டிய செம்மேனியம்மானைத் துதித்துப் போற்றினுன்.

நாயினேன் தன்னை நடுங்கும் பழியகற்றித்
தாயி னே ராகித் தலையளித்தாய் தாள்சரணம்
சேயினேன் காணச் சிவலோகங் காட்டிப்பின்
தோயினேர் நின்றவருட் குன்றேநின் ருள்சரணம்.

இறைவனுடைய பூசைநியமங்களுக்காகப் பல உதவிகளைச்செய்து தன் நன்றியறிதலை வெளியிட்டான் வேந்தன்.

இப்படியாகக் கொலைப்பாதகத்தை நீக்கியதோடு அவனுக்குச் சிவலோகத்தையும் காட்டினுன் ஈசன் என்று அகத்தியர் முனிவர்களுக்குக் கூற, அவர்கள் ஐயனே! 'கூடல் நாயகன் இந்திரனுடைய, வெள்ளையானையினுடைய சாபத்தை இம்மதுரையில் தீர்த்துள்ளான். தாயை மனைவியாகக்கொண்ட அந்தணனின் மாபாதகத்தையும் இத்தலத்தில் போக்கியுள்ளான். அப்படியிருக்க பிரம்மகத்தியை மட்டும் இத்தலத்திலேயே போக்காமைக்குக் காரணம் கூறியருள்க' என்று வேண்டினர். அதற்குக் குறுமுனிவர் எங்கோ இருப்பவர்கள் செய்த பழியைப் பாவத்தையெல்லாம் இத்தலத்தில் போக்கினுர் பெருமான். வரகுணன் இங்கே கொண்ட கொலைப்பாவத்தையும் இங்கேயே போக்கினுல் பின்னுல் வருபவர்களும் பழிபாவங்கள் செய்ய அஞ்சமாட்டார்கள். அதற்காகப் பெருங்கருணையாளன் இம் மதுரை மக்கள் தீயன செய்யக்கூடாதென்பதற்காகத்தான் இவன் பழியை இங்குப் போக்காமல் திருவிடைமருதூரின்கண் போக்கினுன் - என்று எடுத்துரைத்தார்.

அன்றுமுதல் இன்றளவும் மதுரை தனக்கொப்பின்றி; ஏனைய தலங்களுக்கெல்லாம் முடியணியாய் பூலோக சிவலோகம் என்று கூறப்படும் புகழோடு விளங்குகிறது. (வளரும்)

# செய்திகள்

## சித்திரைத்திங்கட் பெருவிழா

**திருவையாற்றில் :**

தருமையாதீனம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 29—4—71 வியாழக்கிழமை முதல் சித்திரைத் திங்கட் பெருவிழா தொடங்கி நடைபெற்றது. 29—4—71 இல் கொடியேற்றமும்; 5—5—71 இல் பெருமான் தன்னைத்தான் பூசித்தலும், ஐயாற்றுப் பெருமான் இடப வாகனத்தில் எழுந்தருளி சைவர்களுக்கு மாகேஸ்வர பூஜை செய்தலும்.; 7—5—71 இல் திருத்தேர்த் திருவீதியுலாவும்; 8—5—71 இல் தீர்த்தம் கொடுத்து அருளுதலும் நடைபெற்றன.

விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. 2—5—71 ஞாயிற்றுக்கிழமையன்று மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. பாலகுருவாயன் எம். ஏ., அவர்கள் " கயிலையும் அப்பரும் " என்ற தலைப்பிலும் 4—5—71 செவ்வாய்க் கிழமையன்று திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. சொர்ணகாளீஸ்வரன் அவர்கள் " ஐயாறன் அடித்தலம் " என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள். அன்பர்கள் திரளாகவந்திருந்து திருவிழாக்காட்சிகளைக் கண்டும் சொற்பொழிவினைச் செவிமடுத்தும் மகிழ்ந்தனர்.

10—5—71 இல் ஸ்ரீ நந்திகேசுவரர் சுயசாம்பிகையுடன் திருமணக் கோலமாய் வெட்டிவேர்ச் சிவிகையிலும், ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியாரோடு விசித்திரக் கண்ணாடிச் சிவிகையிலும் ஏழூர் வலம் வருதலும் ஆகிய திருநாள் நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடைபெற்றன.

**திருப்பனந்தாளில் :**

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திருவிழா 29—4—71 முதல் தொடங்கி 8—5—71 முடிய உள்ள நாட்களில் நடைபெற்றது. 29—4—71 இல் கொடியேற்றமும்,

3—5—71 இல் சகோபுர தரிசனமும், 5—5—71 இல் திருக்கல்யாண மும், 7—5—71 இல் திருத்தேர்த் திருவிழாவும், 8—5—71 இல் பஞ்சமூர்த்திகளும் அணைக்கரைக்கு எழுந்தருளி கொள்ளிடத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் சிறப்பாக நடைபெற்றன.

விழா நாட்களில் மாலையில் சமயச் சொற்பொழிவுகள் நடை பெற்றன. 1, 2, 4, 5—5—71 ஆகிய நான்கு நாட்களிலும் முறையே, தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. இரா, செல்வக்கணபதி, திருமதி ப. நீலா. திரு. வி. சபேசன் ஆகியோர் 'திருமுறைப் பயன்' 'சங்க நூல்களில் சமயநெறி' 'மகளிரும் சமயமும்' 'அன்பின் வெற்றி' என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றி னர். 3—5—71 அன்று திரு ஆர். வேலாயுத ஓதுவார் 'திருநீல கண்டர்' என்ற தலைப்பில் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த் தினர். திருக்கல்யாணத் திருவிழாவை முன்னிட்டு 5—5—71 இல் இன்னிசைக் கச்சேரி நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் வந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

## திருக்கடவூரில் .

திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்த கடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 29—4—71 செவ்வாய்க் கிழமை முதல் சித்திரைத் திருவிழா தொடங்கி நடைபெற்றது. 29—4—71 அன்று கொடியேற்றமும், 1—5—71 இல் திருக்கல் யாணமும், 3—5—71 இல் இடபவாகனக்காட்சியும், சகோபுர தரிசனமும் 4—5—71 இல் ஸ்ரீ காலசம்காரமூர்த்தி வீரநடன தரி சனமும் காலசம்காரமும், தர்மராஜனுக்கு அனுக்கிரகித்தருள லும், 5—5—71 இல் திருத்தேர்த் திருவிழாவும் 8—5—71 இல் தீர்த்தத் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றன.

காலசம்காரத் திருநாளன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நி தானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, காலசம்கார மூர்த்தியைத் தரிசனம் செய்து அன்பர்களுக்குப் பிரசாதம் முதலி யவை வழங்கியருளினார்கள். மக்கள் திரளாகக் கூடி காலசம் காரக்காட்சியைத் தரிசனம் செய்து மகிழ்ந்தனர்.

விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. 1, 2, 3—5—71, 5—5—71 ஆகிய நான்கு நாட்களிலும் முறையே தருமைப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர்கள் திருவாளர்கள், வி. சபேசன், வி. சா. குருசாமி தேசிகர், இரா. செல்வக்கணபதி திருமதி ப. நீலா, ஆகியோர் 'ஞானத்தமிழ்', 'அப்பர் அருந்தமிழ்',

'சுந்தரர் செந்தமிழ்', 'திருவாசகத்தேன்' என்ற தலைப்புக்களிலும்' 4—5—71 அன்று நாகை வித்துவான் திரு. வை. மு. சண்முகதேசிகர்' கடலூரிற் கலயர்' என்ற தலைப்பில் இன்னிசைச் சொற்பொழிவும் நிகழ்த்தினார்கள். அன்பர்கள் கேட்டுமகிழ்ந்தனர்.

**சீகாழியில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா 29—4—71 வியாழக்கிழமை தொடங்கி தொடர்ந்து நடைபெற்றது. 29—4—71 இல் கொடியேற்றமும்- 30—4—71 அன்று திருமுலைப்பால் திருவிழாவும், 3—5—71 இல் ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமி வெள்ளி இடபவாகனரூடராய் சகோபுரத்தில் எழுந்தருளி தரிசனங் கொடுத்தலும், 4—5—71 இல் திருக்கல்யாணமும், 6—5—71 இல் திருத்தேர்த் திருவீதியுலா வருதலும் 8-5-71 இல் தீர்த்தம்கொடுத்து அருளலும் சிறப்புற நிகழ்வுற்றன.

30—4—71 வெள்ளிக்கிழமை திருஞானசம்பந்தருக்குப் பெருமானும் பெருமாட்டியும் இடப வாகனத்தில் பிரமதீர்த்தக் கரைக்கு எழுந்தருளி ஞானப்பால் அருளிய திருநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் புறப்பாட்டின்போது அற்புத விளக்க விரிவுரைக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசிவழங்கியருளினார்கள். ஆண்டுதோறும் நிகழ்வுறுவதுபோல இவ்வாண்டு தருமையாதீனம் திரு. சு. சம்பந்த ஓதுவாமூர்த்திகட்கு 'திருமுறைக் கலாநிதி' என்ற பட்டம் அளித்து 501 வெண்பொற்காசுகள் வழங்கிபொன்னாடை போர்த்தி ஆசி அருளினார்கள். பின்னர்,சிதம்பரம் அறப்பணிசெல்வர். டாக்டர் திரு. K. அரங்கசாமிப்பிள்ளை M. B. B. S., அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். அடுத்து மதுரை பல்கலைக்கழகத்து முன்னாள் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சுந்தரனார் M. A., B. L., M. O. L., அவர்களும், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், சித்தாந்தப் புலவர்மணி, புலவர், திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L., தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர், மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன், வித்துவான், திரு. இரா. செல்வக்கணபதி, திரு. ஆர். வேலாயுத ஓதுவார் ஆகியோர் அற்புத விளக்க விரிவுரை யாற்றினர்.

( அட்டை மூன்றும் பக்கம் பார்க்க )

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருதுஸு வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(15—5—71 முதல் 14—6—71 முடிய)

விரோதிகிருதுஸு வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் சித்திரைமீ 31உ சுக்கிரவாரம் பூராட நக்ஷத்திரம் 3ம் பாதத்தில் கும்ப லக்கினத்தில் விருஷப ராசியில் பிரவேசம் செய்கிறார். இரவில் பாபகிரஹஸம்மந்தமே இல்லாமல் பிரவேசிப்பதால் தக்ஷிண பாரத பூமியில் நித்தியோத்ஸவங்களும் - தானதர்மயஞ்ஞ பிரதிஷ்டைகளும் தனம் தான்யம் இரண்டுக்கும் குறைவில்லாமலும் ஆரோக்கியத்துடனும் பிரஜைகள் ஜீவிப்பார்கள். தெய்வபலம் மறைமுகமாய் இருந்து கொண்டு உலகைக் காக்கும். சுபமுண்டாகும்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும்; அடிக்கடி சஞ்சாரமும் சுப காரியங்களால் அதிகமான செலவுகளும்: உத்தியோகத்தில் உயர்பதவியும் உண்டாகும். நினைத்த காரியங்கள் தாமதமாகவே நடக்கும். வாழ்க்கையில் பலவிதமான மாறுதல்கள் ஏற்படும். தெய்வபலம் காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும், பூர்ணமான சுபத்தையே தரும்; விவாஹாதி மங்கள காரியங்கள் குடும்பத்தில் ஏற்படும்; வெகுகாலமாய் உள்ள வியாதி நிவர்த்தியாகும். நஷ்ட தனங்கள் கிடைக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். நினைத்த காரியங்கள் நடக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வெகு காலமாய் எதிர்பார்த்து நடவாத காரியம் பெறு முயற்சியின் பேரில் நடக்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் கிரய விக்கிர யங்களால் லாபம் ஏற்படும். புதிதான முறையில் ஜீவனலாபம் உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத்தரும். விவாஹாதி சுபகாரியங்களும் புதிதாக கிரஹ லாபமும், புத்தி ராதிகளால் சந்தோஷமும் புது முறையில் விவசாயத்தில் விருத்தியும் குடும்ப சுகமும் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். கிரக சுகமும் ஜீவன சுகமும் அதிகமாகும். கீர்த்தி பத்திரம் கிடைக் கும். வரவு செலவு சமமாகும். மேலோர் பெரியோர்களால் அநேக நன்மைகள் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் பூரணமாக சுபமான பலனைத் தரும். அசாத்தியமான காரியங்கள் எல்லாம் சுலபமாக நிவர்த்தியாகும். ஆரோக்யம்தரும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். கிரஹசுகம் அதிகமாகும். புத்திராதிகளால் நன்மை ஏற்படும். வம்சவிருத்தி ஏற்படும். தெய்வபலம் முன்னின்று காக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். ஜீவனம் ஓங்கும். உறவினர்களுடைய சேர்க்கையும், சுப சோபனாதிகளும், யக்ஞயாகாதி பலன்களும், சர்வசித்தியும் ஏற்படும். ஆரோக்கியம் உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். மாதக் கடைசி யில் அதிகமான செலவுகளும் அலைச்சல்களும் அதிகமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.**

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். ஜீவனம் ஸ்திரப்படும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் கிடைக்கும். கிரயவிக்கிரயங்களும் ஏற்படும். வித்யைவிருத்தியாகும். இல்லற சுகம் அதிகமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**9 தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.**

தனுர்ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். ஸ்திர மான ஜீவனமும், இல்லற சுகமும் ஏற்படும். புத்திராதிகளாலும் மேலோர் பெரியோர்களின் அன்பினாலும் சகல காரியங்களும் சித்தியாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலன்களையேதரும். உத்தியோகத்தில் மேல் பதவி கிடைக்கச்செய்யும். வம்சம் விருத்தி யாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். வியவகாரம் ஜயிக்கும். புதிதாக கிரகலாபம் ஏற்படும். ஆரோக்கியம் உண்டு பண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

**11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,**

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். ஆரோக்கியக் குறைவு காட்டும். விரோதம் உண்டுபண்ணும். நினைத்தபடி காரியங்கள் நடக்காமல் தடங்கல் ஏற்படும். தெய்வ பலம் உள்ளவர்களுக்கு ஆரம்பத்தில் சிரமம் ஏற்பட்டு பின்பு எல்லாம் நன்மையாகவே நடக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தொழில் விருத்தியும், உத்தியோக லாபமும் உண்டுபண்ணும். கீர்த்திப் பத்திரம் கிடைக்கும். புத்திராதிகள் பந்துமித்திரர்கள் எல்லோ ரும் ஒற்றுமையாக இருப்பார்கள். குடும்பத்தில் சுப காரியங் களும், தேவபிரதிஷ்டை முதலிய ஸத்கர்மாக்களால் நல்ல பலன் கிடைக்கும். தெய்வ பலத்தால் எல்லாம் சுபமாகவே நடக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

குறிப்பு :— விரோதிகிருதுஹு வைகாசிமீ 20 ஆந் தேதி வியாழக்கிழமை ஹஸ்த நக்ஷத்திரத்தில் இராகுகாலவேளையில் ஸ்ரீ சனிபகவான் பிரவேசம் செய்கிறார். அதனுடைய பலன், விந்தியோத்தரதேசங்களிலும், மேல்நாடுகளிலும், நாஸ்தீகம் ஓங்கின தேசங்களிலும் பல மாறுதல்களும்., இயற்கைக்கோளாறுகளும், திவ்யம், பௌமம், அந்தரிக்ஷம் என்னும் மூன்றுவித உத்பாதங்களும், யுத்தமேக சஞ்சாரம் விருத்தியாகவும், துர்பிக்ஷம் அகாலமரணம் பசிப்பிணியால் பயம் இவைகளைக் கொடுக்குமாதலால் கடவுளால் அளிக்கப்பட்ட காவலர்கள் உலக க்ஷேமத்தின் பொருட்டும், தன்னுடைய க்ஷேமத்தின் பொருட்டும் நாஸ்தீகத்தை அடியோடுவிட்டு சாஸ்திரங்களை நம்பி ஆங்காங்கு புண்ணியபூமிகளில் வேதாகம முறைப்படி லக்ஷ கோடி ஹோமங்களும், அர்ச்சனைகளும் நடத்திக்கொண்டு, சாதுக்களையும் பக்தர்களையும் அலக்ஷியம் செய்யாமல் தங்களுடைய கடமையாக நடத்திக்கொண்டுவர உலகம் காப்பாற்றப்படும், சுபமுண்டாகும்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Thiagarajaswamy Devasthanam, Tirukkuvalai.

இன்று திருக்கோளிலித் (திருக்குவளைத்) திருக்கோயிலைத் தரிசிக்கும் பேறு பெற்றேன். தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான இத்திருக்கோயில் சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறது. அர்ச்சகர்கள், ஓதுவார்கள் சிறப்புறும் பணிசெய்வதைக் கண்ணுற்றேன். திருக்கோயில் உள்ளும் புறமும் தூய்மையாக வைக்கப்பட்டுள்ளது. உள்துறை பொது நிர்வாகம் இரண்டுமே திருப்தியாக உள்ளது. திருக்கோளிலி எம்பெருமான் திருவருள் உலகைகாக்க என வேண்டுகிறேம்.

ஊரன் அடிகள்,

18—3—71

அறங்காவலர்,

வடலூர்.